யுனெஸ்கோ

உலகைக் காட்டும் பலகணி

கூரியர்

நவம்பர் 1970 ஆண்டுச் சந்தா ரூ. 10·50 தனிப்பிரதி ரூ. 1·00

1970-லிருந்து முடிவு காண வேண்டிய பத்தாண்டுகள்



Photo © Archives Laffont, paris

உலகக் கலைக் கருவூலங்கள் 48 அயர்லாந்து

இரும்புக் கால 'உருண்டைத் தலை'

இவ் வெண்கலத் தட்டின் (கி.பி.2 ஆம் நூற்றாண்டு) வேலைப்பாடுகள் அதற்கு உருண்டு திரண்ட மனித முகத்தின் தோற்றத்தை அளிக்கின்றன. இத் தட்டின் பயன் தெரியவில்லை. அதன் வடிவியல் உருவங்கள் கிறித்துவ ஊழிக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் அயர்லாந்தில் தோன்றிய கெல்டிய "லா தேன்" கலைப் பண்பை ஒத்திருக்கின்றன. ஐரோப்பிய இரும்புக் காலக் கலையின், குறிப்பாக (சுவிட்சர்லாந்தின் நாஷட்டல் ஏரியின் பெயர் பெற்ற) "லா தேன்" கலையின் தொடர்பினால் அயர்லாந்தின் வேலைப்பாட்டுக் கலை முற்றிலும் மாறியது. "லா தேன்" கலையில் பண்டைய வடிவியல் கலையும் ஸ்டெப் வெளியின் விலங்குக் கலையும் பண்டைய கலையின் வேலைப்பாடுகளும் கலந்திருந்தன.

யுனெஸ்கோ கூரியர்

நவம்பர் 1970

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தகடிரஸ்டினுல் வெளியிடப்படுகிறது.

யுனெஸ்கோவினுல் பதின்மூன்று பதிப்புகளாக வெளியிடப்படுகிறது.

ஆங்கிலம் ஜப்பானிஸ்
ஃபிரெஞ்சு இத்தாலியன்
ஸ்பானிஷ் ஹிந்தி
ரஷ்யன் தமிழ்
ஜெர்மன் ஹீப்ரு
அராபிக் பெர்சியன்
அமெரிக்க ஐக்கிய நாடு

விற்பனை, விநியோக அலுவலகம்:
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10.
ஆண்டுச் சந்தா ரூ. 10.50

யுனெஸ்கோ கூரியர், செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப் படுகிறது. செப்டம்பர்—அக்டோபரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்படவேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெற வேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப் படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெருத கடடுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆசிரியர் அலுவலகம்:
யுனெஸ்கோ, பிளேஸ் த ஃபான்டினுய்
பாரிஸ்-7. ஃபிரான்ஸ்.
பிரதம ஆசிரியர்: ஸாண்டி காஃப்ளர்
உதவிப் பிரதம ஆசிரியர்: ரெனி காலோஸ்
பிரதம ஆசிரியருக்கு உதவியாளர்:
லூஸியோ அட்டினெல்லி.
நிர்வாக ஆசிரியர்கள்:
ஆங்கிலப் பதிப்பு: ரொனுல்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு: ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு: அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு: விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு: ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு: அப்தல் மோனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு: ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்கியோ)
இத்தாலியப் பதிப்பு: மரியா ரெமிட்டி (ரோம்)
ஹிந்திப் பதிப்பு: கர்த்தார் சிங் துக்கல் (டில்லி)
ஹீப்ரு: அலெக்ஸாண்டர் பெலி (ஜெருசலம்)
பெர்சியப் பதிப்பு: ஃபெரெதூன் ஆர்தலன் (டெஹ்ரான்)
தமிழ்ப் பதிப்பு: தெ. பொ. மீனுட்சிசுந்தரன் (சென்னை)
தமிழ்ப்பதிப்பு நிர்வாக ஆசிரியருக்குத் துணைவர்கள்:
எஸ். கே. தம்பா, மீ. முகம்மது முஸதபா
ஆராய்ச்சி: ஒல்கா ரோடல
அமைப்பு, சித்திரம்: ராபர்ட் ஜாகுமின்
எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்பட வேண்டும்.

The UNESCO Courier

November 1970 No. 40

No. 10 - 1970 MC 70-2-259A

இதழ் 40

CONNEMARA PUBLIC LIBRARY
13 MAR

பக்கம்

4 வளர்ச்சியில் நெருக்கடி
—மால்கம் எஸ். ஆதிசேஷையா

I. கடந்த பத்தாண்டுகளின் கவலைதரும் செய்தி

11 II. அடுத்த பத்தாண்டுகளில் இன்னெரு வாய்ப்பு

15 பாலஸ்தீன் அகதிப் பள்ளிகளின் நெருக்கடி நிலைமை

18 சித்தியர்களின் பொற்குவை
—அலெக்ஸாண்டர் கர்பிச்னிக்கோவ்

22 இக்காலத்திற்கேற்ற பொருட்காட்சி மனைகள்
—டங்கன் எஃப். காமரான்

28 ஐக்கிய உலகக் கல்லூரிகள்
பன்னுட்டுக் கல்வியில் புதியதொரு கருத்து
—டார் சைல்ட்

2 உலகக் கலைக் கருவூலங்கள்
—இரும்புக் கால 'உருண்டைத் தலை' (அயர்லாந்து)



அட்டைப் படம்

ஐ. நா. வளர்ச்சிப் பத்தாண்டு முடிந்து இரண்டாம் வளர்ச்சிப் பத்தாண்டு தொடங்கும் இவ்வாண்டு, வளர்ச்சியுறும் நாடுகளின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்காகப் பல நாடுகள் ஒத்துழைப்பதில் மிக முக்கியமான கட்டமாகும். நான்காம் பக்க கட்டுரை இந்நிலையை நன்கு விளக்குகிறது. மிசௌரியில் செயிண்ட் லூயிஸிலுள்ள மேரிவில் கல்லூரியின் கலைப் பகுதித் தலைவரான அமெரிக்க கலைஞர் கெண்ட் அடிசன் செய்த இந்த உலோக சிற்பம் வளர்ச்சிப் படிகளில் ஏற முயலும் மனிதனின் முயற்சியைக் காட்டுகிறது.

Photo © Gardner Advertising Company, St. Louis

வளர்ச்சியில் நெருக்கடி

1 கடந்த பத்தாண்டுகளின் கவலைதரும் செய்திகள்

அக்டோபர் 24, 1970, ஐக்கிய நாடுகளின் 25ஆம் ஆண்டு நிறைவு நாள். உலகம் இந் நாளைக் கொண்டாடும் வேளையில், மூன்ருவது உலகின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்காகப் பல நாடுகள் ஒத்துழைப்பதில் நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. ஐ.நா. வளர்ச்சிப் பத்தாண்டு (1960-69) முடிந்து 2ஆம் வளர்ச்சிப் பத்தாண்டு (1970-79) தொடங்கும் இந்நிலை பற்றி யுனெஸ்கோ துணைப் பொது இயக்குநர், டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷையா இக் கட்டுரையில் விளக்குகிருர். அவர், யுனெஸ்கோ சென்ற மாதம் வெளியிட்ட "லெட் மை கன்ட்ரி அவேக்" எனும் தமது நூலில் (பின் அட்டை உட்புறம் பார்க்க) பொருளாதார வளர்ச்சிக்கு கல்வி, அறிவியல், பண்பாடு எவ்வாறு துணை செய்யக் கூடும் என்பது பற்றி விரிவாக ஆய்ந்துள்ளார். அவர் கடந்த பத்தாண்டின் சாதனைகளையும் தோல்விகளையும் பற்றியும் வருங் காலப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளைப் பற்றியும் இங்கு தெளிவாகக் கூறுகிருர்.



Photo David Robison © Parimage - C. P., Paris

மால்கம் எஸ். ஆதிசேஷையா
யுனெஸ்கோ துணைப் பொது இயக்குநர்

உலகின் மூன்றில் ஒரு பகுதியாகிய செல்வ நாடுகளுக்கும் மூன்றில் இரண்டு பகுதியாகிய ஏழை நாடுகளுக்கும் இடையேயுள்ள வாழ்க்கைத்தரப் பிளவு நாள்தோறும் விரிவடைந்து வருகின்றது. இது வளர்ச்சியில் ஏற்பட்டு உள்ள ஆழ்ந்த நெருக்கடியின் எளிய, பயங்கர அடையாளமாகும்.

இந்த வாழ்க்கைத் தர வேறுபாட்டை டாலர் எண்ணிக்கையில் பார்ப்போம். வளர்ச்சிப் பத்தாண்டுக் காலமாகிய 1960—69இல் செல்வ நாடுகள் தமது தலா வருமானத்தை ஆண்டுதோறும் 4 சதவீதமும் (292 டாலர்), ஏழைநாடுகள் 2 சதவீதமும் (12 டாலர்) அதிகரித்துள்ளன.

ஆனல் இந்த மொத்த தொகை உண்மை நிலையை உணர்த்துவதில்லை. இன்றைய நிலை நீடிக்குமானல் கி.பி. 2000இல் அமெரிக்காவில் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் 10,000 டாலர் வருமானம் பெறுவர். கி.பி. 2119இல் ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் தலா வருமானம் 100 டாலரிலிருந்து 200 டாலராகவும், 2009இல் அர்ஜெண்டீனவிலும் உருகுவேயிலும் 500-லிருந்து 1000 டாலராகவும் உயரும்.

நமது வழக்கமான நடைமுறை வழிகளால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடிவதில்லை எனலாம். கொள்கையளவில் தோன்றும் பொருளாதாரத் திட்டங்

Photo © Harvey Shaman, Kew Gardens, N. Y.



REGD. NO. M. 8276

Photo © Marcel Ratinaud, Paris

களினுல், முதலீடு செய்தல் முக்கியமா அல்லது மனித வளத்தை வளர்ப்பது முக்கியமா, சமநிலே வளர்ச்சி தேவையா அல்லது ஒருமுக வளர்ச்சி தேவையா, கட்டுப்பாடு சிறந்ததா அல்லது தடையில்லாப் போட்டி சிறந்ததா என்று தீர்மானிக்க முடிவதில்லே.

ஏற்றத் தாழ்வுகள் எப்போதும் நம்மிடம் இருந்து வந்துள்ளன. ''ஏழைகள் எப்போதும் நம்முடன் இருப்பர்.'' இப்போது நாம் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டிருப்பதால் இது நெருக்கடி நிலேயாகத் தோன்றுகிறது. ஆனுல் இந் நெருக்கடியின் இயல்பும் அளவும் மாறிவிட்டன. ஏற்றத் தாழ்வுகள் வளர வளர அவை அநீதியின் அடையாளமாகவும், வளர்ச்சியின் நெருக்கடி மனச்சான்றின் நெருக்கடியாகவும் மாறிவிட்டன.

1958இல் சமய நிறுவனங்களின் உலக அளவையும் பிறகு பன்னுட்டு அமைப்புகளாகிய ஐ. நா., யுனெஸ்கோ, வாணிகம், வளர்ச்சி பற்றிய ஐ.நா. மாநாடுகள், பொருளாதாரக் கூட்டுறவு, வளர்ச்சி நிறுவனம் ஆகியவையும் ஒரு சதவீதம் ஏழை நாடுகளின் வளர்ச்சிக்காக அளிக்கவேண்டுமெனத் தீர்மானித்தன. இது செயல் முறையில் நடைபெறவில்லே என்பது நெருக்கடியைத் தெளிவாகக் காட்டுகிறது.

இதில் துயர் தரும் செய்தி என்னவென்ருல், இத்தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே குறிப்பிட்ட ஒரு சதவீதம் (1961இல் 800 கோடி டாலர்) ஏழை நாடுகளுக்கு அளிக்கப்பட்டு விட்டது. 1967இல் அது 0.68 சதவீதமாக நிலேபெற்று விட்டது; 1968இல் 0.64 சதவீதமாக குறைந்தது. இதிலிருந்து வட்டியையும் கடன் தொகையையும் கழித்து விட்டால் உதவித் தொகை 0.4 சதவீதமாக அல்லது 630 கோடி டாலராகக் குறைந்துவிடும்.

இலத்தீன் அமெரிக்காவைப் பொறுத்த வரையில், வட்டியையும் இலாப பங்குத் தொகையையும் கழித்துவிட்டால், அங்கிருந்து செல்வ நாடுகளுக்குச் செல்லும் தொகையே மிகுதியாக இருக்கிறது. இதிலிருந்து கடந்த 10 ஆண்டுகளில் செல்வ நாடுகளில் அதிகரித்த 60,000 கோடி டாலர் வருமானத்தில் ஒரு டாலர்கூட ஏழை நாடுகளின் உதவிக்காக அளிக்கப்படவில்லே என்பது தெரிகின்றது. செல்வ நாடுகள் ஆண்டுதோறும் 3,500 கோடி டாலர் மதுவுக்கும், 1,500 கோடி டாலர் சிகரெட்டுக்கும் 20,000 கோடி டாலர் படைக்கலத்திற்கும் செலவிடுவதை இங்கு ஒப்பு நோக்க வேண்டும்.

வளர்ச்சி நெருக்கடி உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ளது. அது செல்வ, ஏழை நாடுகளுக்கெல்லாம் பரவியுள்ளது. குடும்பம் என்பது சமூகத்தின் அடிப்படை அலகு எனும் நிலே எங்கும் மாறிவருகின்றது. இளேஞரின் புரட்சி இதை ஓரளவு காட்டுகிறது. நகர்ப்புறங்களில் சேரிகள் தோன்றுதலேயும், காற்றும் நீரும் மாசுபடுதலேயும், அறிவியலும் தொழில் நுட்பமும் நல்வழியிலும் தீயவழியிலும் பயன்படுவதையும் எங்கும் காண்கிறேும்.

இப்பயங்கர நெருக்கடியின் மற்றேர் இயல்பை ஜான் கென்னத் கால்பிரெய்த் தமது ''தி அஃப்ளுவென்ட் சொசைட்டி'' (வளமான சமூகம்) எனும் நூலில் வேடிக்கையாகக் கூறுகிருர்:

''விசையாற்றலால் இயக்கி நிறுத்தப்படும் இளஞ்சிவப்பு, ஊதா நிறமுள்ள வெப்பக் கட்டுப்பாடுடைய மோட்டார் வண்டிகளில் சுற்றுப் பயணம் செய்யும் குடும்பத்தினர் நல்ல சாலேகளற்ற நகர்களின் வழியாகச் செல்கின்றனர். அங்கெல்லாம் குப்பைகளும், பாழ்பட்ட கட்டிடங்களும் விளம்பரப் பலகைகளும், நிலத்துக்கடியில் புதைக்கப்பட்டிருக்க வேண்டிய கம்பிகள் கட்டப்பட்டுள்ள கம்பங்களும் காணப்படுகின்றன. அவர்கள் செல்லும் நாட்டுப்புறங்கள் வாணிக விளம்பரக் கலேயினுல் மறைக்கப்பட்டு உள்ளன. அவர்கள் எடுத்துச் செல்லத்தக்க குளிர்பதனப் பெட்டியிலுள்ள உணவை மாசுபட்ட நீரோடையருகில் உண்டு உடல் நலத்திற்கும் நன்னடத்தைக்கும் பொருந்தா பூங்காக்களில் இரவைக் கழிக்கின்றனர். அழுகிய குப்பை நாற, நைலான் கூடாரத்தில் காற்றடைத்த மெத்தையில் கண்ணயரும்போது அவர்கள் தமது வாழ்க்கை வளங்களின் மாறுபாட்டை ஓரளவு எண்ணிப் பார்க்கக்கூடும்.''

இது போலவே ஏழை நாடுகளிலும் வளர்ச்சியின் காரணமாக குடும்பமும் பிற உயர்ந்த நிறுவனங்களும் பாழ்படுகின்றன. இது மேல்நாட்டுமயமாதல் எனப்படும் தவருன ஒருவகை போலி நடிப்பாகும். ஏனெனில் வெப்பக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள், விசையாற்றல் மோட்டார் வண்டிகள், குளிர்பதனப் பெட்டிகள், நைலான் கூடாரங்கள் போன்ற மேல்நாட்டுச் சாதனங்களேப் பயன்படுத்துவதே வளர்ச்சியின் அடையாளம் என அந்நாடுகள் கருதுகின்றன.

சமூக நிலேயிலும் இதுபோலவே ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. ஆனுல் 6 சதவீத நாட்டின் மொத்த ஆக்கம், 10,000 பேருக்கு 10 மருத்துவர்கள், 100 பேரில் இருவருக்கு திரைப்படம் பார்க்கும் வாய்ப்பு போன்ற புள்ளி விவரங்கள் இவற்றை மூடி மறைத்து விடுகின்றன. பல நாடுகளில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருப்பினும், அதனுல் சமூக ஏற்றத் தாழ்வுகள் விளேந்துள்ளதைக் காணலாம். உண்மையில் உயர்ந்த வளர்ச்சி வீதமுள்ள நாடுகளில் வளர்ச்சியின் பயனே மக்கள் சமமாகப் பெறுவதில்லே.

ஆகவே, சில ஏழை நாடுகளில் பொருளாதார வளர்ச்சியின் பயனுக வருமான ஏற்றத்தாழ்வுகள் விளேகின்றன என்றும், சேமிப்பு அதிகரிக்க ஒரு சிலரது வருமானம் மிகுதியாக வளர வேண்டுமென்றும் தவருன சமூகத் தத்துவம் பரவி வருகின்றது. உண்மையில் மிகுதியான வருமான ஏற்றத் தாழ்வினுல் வளர்ச்சி ஏற்பட்டுவிடவில்லே.. அதற்கு மாருக இதனுல் வளர்ச்சி தடைபட்டு, இன்ப நுகர்வுப் பொருள் உற்பத்திப் பெருக்கம், ஊழல், வரி ஏய்ப்பு, பணம் வெளிநாடுகளுக்குச் செல்லுதல் போன்ற தீமைகள் விளேந்துள்ளன.

கொள்கை வகுப்பதிலும் வளர்ச்சித் திட்டங்களிலும் பொதுமக்கள் பங்கு பெருமையே இந்த சமூகப் பிரச்சினேகளுக்கு காரணம். இனம், பால், சாதி, வகுப்பு, மதம், நிலப்பகுதி போன்றவற்றின் அடிப்படையில் பதவி, வருமானம், அதிகாரம், கல்வி போன்றவை எழாமல் தடுப்பதே தற்கால அரசாங்கங்களின் பொதுவான கொள்கையாக இருக்கவேண்டும்.

வளர்ச்சியுறும் நாடுகள் பொருத்தமான வேலே வாய்ப்புகளே உருவாக்காமலிருப்பது இந்நெருக்கடியின் முக்கிய இயல்பாகும். இதை உலக வளர்ச்சி நிலேயின் துயரமான தோல்வி எனலாம். 1970-79இல் ஏழைநாடுகளில் 30 கோடி இளேஞர் வேலே தேடுவர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களுள் $\frac{2}{3}$ பகுதினருக்கு புதிதாக வேலேகளே உருவாக்கித் தரவேண்டும். ஆனுல் வளர்ச்சியுற்ற நாடுகளிலோ ஓய்வு பெறுவோருக்குப் பதிலாக இவர்கள் வேலேயிலமர்வர்.

இன்று வளர்ச்சியுறும் நாடுகளிலுள்ள ஆண்களில் 20 சதவீதம் பேருக்கு வேலேயில்லே. மக்கள் தொகை பெருக்கமும், 1950–70 வரை ஏழை நாடுகள் பின்பற்றிய வளர்ச்சிக் கொள்கைகளும் வேலேயின்மைப் பெருக்கத்திற்கு காரணம் குழந்தைகளின் இறப்பு வீதம் குறைந்துள்ளதாலும் மக்கள் நீண்ட காலம் வாழ்வதாலும் வேலேயாட்களின் தொகை பெருகியுள்ளது.

பாகிஸ்தான், கொரியா குடியரசு, வெனிசுவலா போன்ற நாடுகளில் நாட்டு மொத்த ஆக்க வளர்ச்சி வீதம் உயர்ந்தபோதிலும் போதிய வேலே வாய்ப்புகள் பெருகவில்லே. குறைந்த வட்டி, நாணய மாற்றுவீதம், மலிவான இயந்திர இறக்குமதி, மிக உயர்ந்த கூலி இவற்றினுல் ஏற்பட்ட தொழில் துறைப் பெருக்கத்தினுலும், உற்பத்தித் திறன் உயர்வினுலும், உழைப்பைக் குறைக்கும் இயந்திரங்களே மிகுதியாகப் பயன்படுத்துவதினுலும் போதிய அளவு வேலே வாய்ப்புகள் பெருகவில்லே என்பது உண்மையில் வருந்தத் தக்கது.

உயர்ந்த கூலியின் காரணமாக தொழிலாளர் நாட்டுப் புறங்களிலிருந்து வந்த போதிலும், தொழிலாளரை மிகுதியாகப் பயன்படுத்தும் தொழில்களும் ஏற்றுமதிப் பொருள்களே உற்பத்தி செய்யும் தொழில்களும் வளராததால் நகரங்களில் வேலேயின்மை பெருகியுள்ளது. நடுத்தரப் பயிற்சி அரிதாக இருப்பதால், பயிற்சி பெருத அல்லது குறைவாகப் பெற்ற தொழிலாளரிடையே 1:10 அல்லது 12 விகிதத்தில் வேலேயின்மை பரவியுள்ளது. ஏற்கெனவே கூறியது போல், வேலேயின்மை நெருக்கடியில் குறிப்பிடத்தக்கது வேலேயின்மை ஏற்படவேண்டிய தேவையேயில்லே. ஏனெனில் எல்லோருக்கும் வேலேயளிக்கக் கூடிய அளவிற்கு இன்னும் முடியாத வேலேகள் பல உள.

வேலையின்மையின் பயங்கரப் பெருக்கம்

நான் விளக்க முயலும் இந் நெருக்கடி வரலாற்றின் விளைவாகத் தோன்றியுள்ளது. உலக மக்களுள் $\frac{2}{3}$ பகுதியினர் வாழும் நூறு நாடுகள் வளர்ச்சி பெற விழைகின்றன. இவற்றுள் 65 புதிய ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளும் உள்ளன. ''அரசியல் விடுதலை பெறுவதில் எமக்குத் துணை செய்ததுபோல், பொருளாதார விடுதலை எனும் நீண்ட, கலைப்பூட்டும், ஆனால் ஊக்கமளிக்கும் பாதையிலும் துணையாக வரவேண்டும்'' என்று ஒரு நாட்டின் தலைவர் என்னிடம் கூறினார். முன்னேற்ற வேலை தொடங்கி விட்டது. அஃது ஒரு நாளிலோ, ஆண்டிலோ முடிவதில்லை. இந்நூற்றாண்டு முழுவதும், அதன் பிறகும் அது தொடரும்.

ஏழை நாடுகள் உண்மையிலே வளர்ச்சியை விரும்பித் தெரிந்துகொண்டனவா? உறுப்பு நாடுகளுக்குச் சென்றபோதும், அவற்றின் கிராம திட்டங்களில் ஈடுபட்டபோதும், பயிற்சி அல்லது ஆராய்ச்சித் திட்டங்களை வகுத்தபோதும் இதே கேள்வி எழுந்தது.

ஒரு நாள் கிராம மக்களும் ஐ.நா. குழுவினரும் சீரமைப்பு வேலையொன்றில் மூழ்கிக் களைத்திருந்தபோது, அக்கிராமத் தலைவன் ''நன்கு உழைக்க வேண்டுமென்ற உணர்ச்சியால் உந்தப் பெற்றால், உடனே படுத்துக்கொள்; உணர்ச்சி மறைந்து போகும்'' எனும் பண்பாட்டுக் கருத்தை நம்பி, மகிழ்ச்சியான மனநிறைவு பெற்றிருந்த தனது கிராமவாசிகளுக்குத் தான் எவ்வாறு அவ்வேலையின் முக்கியத்துவத்தை உணர்த்த முடியும் என்று என்னிடம் கேட்டான்.

இந்தியாவில் காந்தியடிகள் இதை இன்னும் தெளிவாகக் கூறினார்: ''நமது உழவன் உண்மையாக ஊதியம் தேடுகின்றான். எவ்வாறு தனது பெற்றோரிடமும், குழந்தைகளுடனும், பிறருடனும் நடந்து கொள்ள வேண்டுமென அவனுக்கு ஓரளவு தெரியும். ஒழுக்க விதிகளும் அவனுக்குத் தெரியும். ஆனால் அவனுக்குத் தனது பெயரை எழுதத் தெரியாது. அவனுக்கு எழுத்தறிவு அளிப்பதன் நோக்கம் என்ன? அதனால் அவனது மகிழ்ச்சி எள்ளளவேனும் கூடுமா?''

அண்மையில் இதே அடிப்படை கேள்வி பற்றி அராபிய நாடொன்றில் வாதித்தேன். அந்நாட்டவரிடம் பெருமித உணர்ச்சி, ஆழ்ந்தபற்று, மறக்காத பகை, அசையா நம்பிக்கை, பெரும் ஏற்றத் தாழ்வுகள், அழியா மதப்பற்று ஆகிய அடிப்படை இயல்பு இன்னும் நிலவுகின்றன. கனி வளம் மிகுந்த நாட்டுப்புறப் பகுதியைப் பயன்படுத்துவதற்கு அந்நாட்டு நிலவியல் வல்லுநருக்குப் பயிற்சியளிக்கும் திட்டமொன்றை வகுத்துக் கொண்டிருந்தோம்.

இத்திட்டத்தினாலும் பிறவற்றினாலும் விளைந்த சமூக, பண்பாட்டு மாற்றங்கள் பற்றி விரிவாக வாதித்தோம். ''வளர்ச்சித் திட்டங்கள் இங்கு நம் நடுவில் தோன்றி விட்டன. அவற்றையும் அவற்றினால் ஏற்படும் சமூக, பண்பாட்டு மாற்றங்களையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இதைத் தவிர வேறு வழியில்லை'' என்று கூட்டத்திலிருந்த அனைவரும் முடிவு கூறினர். வளர்ச்சி குன்றிய நாடுகள் வளர்ச்சி பற்றி என்ன கருதுகின்றன என்பதை இது காட்டுகிறது. அதாவது அவை மாற்றத்தை அமைவடக்கத்தோடு ஏற்றுக்கொள்கின்றன. ஆனால் உண்மையில் வளர்ச்சிக்கு திட்டமிடப் பெற்ற உணர்ச்சியூட்டும் மாற்றம் தேவை.

ஏழை நாடுகளின் வளர்ச்சி விருப்பம் திட்டத்தின் வழியாக வெளிப்படுகிறது. திட்டத்தை எல்லா நாடுகளும் சமூக செய்முறையாக ஏற்றுக்கொண்டுள்ளன. அத்தகைய திட்டங்கள் பலமுறை வெறும் புள்ளி விவரக் குறிக்கோள்களாகவும் கணக்கிடும் முறையாகவும் அமைந்து விடுகின்றன. அவை வளர்ச்சியின் சமூக, மனித. நிறுவனத் தேவைகளை அறிவதில்லை. அவற்றிற்கு திட்டக்கொள்கை தேவை. அவற்றை செயல்படுத்துவதிலும் திட்டங்களைத் தயாரிப்பதிலும் குறைபாடுகள் உள்ளன. செயல்திறமிக்க தனியார் துறையும் முற்றிலும் பயன்படுத்தப்படவில்லை.

ஆயினும் திட்டங்களின் விளைவாக ஏற்பட்ட வளர்ச்சி வீதமானது, தேக்கமும் மந்தமும் நீங்கி ஏழை நாடுகளின் உற்பத்தித் திறன் வளர்ந்து, பரந்த, மிகச் சிக்கலான திட்டங்கள் தொடங்கியுள்ளதைக் காட்டுகிறது. மேலும் திட்டங்கள் முற்காலத்தில் இல்லாத அளவிற்கு சேமிப்பையும் முதலீட்டையும் பெருக்கியுள்ளன. முதலீட்டில் 85 சதவீதம் உள்நாட்டு சேமிப்பிலிருந்து பெறப்பட்டது. ஏழை நாடுகளின் தாழ்ந்த வருமானத்தையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் பார்க்கும்போது இது பெருமைப்பட வேண்டிய செயலாகும்.

கல்வித் துறையில்தான் மிகச்சிறந்த சாதனைகள் நிகழ்ந்துள்ளன. எல்லா ஏழை நாடுகளும் அனைவருக்கும் இலவசக் கல்வியளிக்கும் திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. நாட்டுப்புறப் பெற்றோர் முதலில் தமது குழந்தைகள் வேலை செய்து பெறும் ஊதியத்தைத் துறக்க விரும்பவில்லை. வறுமையினாலும் சுரண்டலினாலும் அவர்கள் இவ்வாறு செய்தனர். ஆனால் சமூக மதிப்பும் கல்வியின் பொருளாதாரப் பயனும் அவர்களை இதைத் துறக்கச் செய்தன. அண்மையில் நான் சென்ற 5 நாடுகளில் 3 ஆண்டுகளில் மக்கள் தொகை 1 முதல் 2 சதவீதம் குறைந்திருந்தது. அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்கப் பெற்றதையும் எழுத்தறிவின்மை அகன்றதையும் இதற்கு காரணமாகக் காட்டினர்.

1950 முதல் 1965 வரை உலகில் பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் மாணவர் தொகை 3 மடங்கானது. இவ்வாண்டுகளில் வயது வந்தோர் 20 கோடி பேர் எழுத்தறிவு பெற்றனர். 1960 முதல் 1965 வரை கல்விச் செலவு ஆண்டுதோறும் ஆசியாவில் 13 சதவீதமும், ஆப்பிரிக்காவில் 16 சதவீதமும், இலத்தீன் அமெரிக்காவில் 20 சதவீதமும் உயர்ந்துள்ளது. அங்கு அறிவியல், தொழில் நுட்பத் திட்டங்கள் உருவாகி வருகின்றன. ஏழை நாடுகள் தமது நாட்டு வருமானத்தில் 5 சதவீதம் கல்விக்காகச் செலவிடுகின்றன. செல்வ நாடுகள் 7 சதவீதம் செலவிடுகின்றன.

ஆனால் கல்வியில் எண்ணிக்கையளவில் பெருக்கம் ஏற்பட்டிருப்பினும், தரத்தில் தாழ்வு ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கது. பள்ளி, பல்கலைக் கழக வசதிகள் ஒரு நாளில் கால் பகுதிதான் பயன்படுத்தப் பெறுகின்றன. கல்விக் கூடங்களில் சேர்ந்தவர்களில் 50 சதவீதம் இடையில் படிப்பை நிறுத்தி விடுகின்றனர் அல்லது தேர்வில் தேறாது திரும்பப் படிக்கின்றனர். பாடத் திட்டங்களும் முறைகளும் சிறப்புப் பயிற்சிகளும் ஆளுமை வளர்ச்சிக்கோ சூழ்நிலைக்கோ நாட்டின் வேலை வாய்ப்பு நிலைக்கோ பொருத்தமாக அமையவில்லை.

சுகாதாரத் துறையில் வியத்தகு சாதனைகள் நிகழ்ந்துள்ளன. கொள்ளை நோய்களும் நோய் சாதனங்களும் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டன. பிளேக் நோயில் இறந்தோர் தொகை 1951இல் 17,000-லிருந்து 1966இல் 47 ஆகவும், காலராவில் 63,300லிருந்து 4,400 ஆகவும் அம்மை நோயில், 2,26,000-லிருந்து 12,200 ஆகவும் குறைந்து விட்டது. இதனால் ஏழை நாட்டில் தனிமனிதனுக்கு நேர் பயன் விளைந்துள்ளது. பிறந்த குழந்தை நீண்ட நாள் வாழும் வாய்ப்பு பெறுகிறது.

நான் குறிப்பிட்ட 5 நாடுகளிலும் 5 வயதுவரை இறப்பு வீதம் ஆயிரத்துக்கு இரண்டிற்கும் குறைவாக இருந்தது. இது நடைமுறை அறிவியலின் ஆற்றலை நன்கு எண்பிக்கிறது. உலகில் குழப்பங்கள் நீக்கி, மனிதனின் ஆற்றல் போர் முயற்சிகளுக்குப் பதிலாக அமைதிப் பணிகளுக்குப் பயன்படுமானால் அனைவரும் நலம் பெறுவர்.

விவசாயத் துறையில் மக்கள் தொகைக்கு ஏற்ற அளவு உற்பத்தி பெருகவில்லை; பல பகுதிகளில் மிகக் குறைந்துமிருந்தது. விவசாயப் பெருக்கமும் சீரமைப்பும் வளர்ச்சிக்கு இன்றியமையாததென்பதும் அதைத் தானாகவே அடைய முடியாதென்பதும் நாம் இப்பத்தாண்டுகளில் கற்றுக் கொண்ட முக்கிய பாடமாகும்.

வளர்ச்சியுறும் நாடுகள் 1930-39இல் 1.4 கோடி டன் தானியம் ஏற்றுமதி செய்தன. ஆனால் 1960-69இல் அவை 1.1 கோடி டன் இறக்குமதி செய்கின்றன. ஆகவே பல நாடுகள் தமது விவசாயக் கொள்கைகளை மாற்றின. ஏனெனில் அவை தமது தொழிலாளருக்குத் தேவையான உணவில்லை என்பதையும், வேலை வாய்ப்பு, வருமானம், சேமிப்பு, அயல் நாட்டுச் செலாவணி ஆகியவை குறைந்து விட்டன என்பதையும் உணர்ந்தன.

மக்கள் நிலை இதைவிட கவலை தருவதாக இருந்தது. 50 கோடி மக்கள் பசியால் வாடினர். 10 ஆண்டுகளில் இத் தொகை இன்னும் 60 கோடியாக உயரும். இவர்கள் புரதமும் உணவூட்டமும் குறைந்த உணவையே உண்டனர். இதனால் உடல், உள்ளம், ஆன்மா எல்லாம் பாதிக்கப்பட்டன. உடனே மாற்றம் தேவையாக இருந்தது. கொள்கைகளை மாற்றியதன் விளைவாக வளர்ச்சியுறும் நாடுகள் பல

Photo © Parimage (C.P.), Paris

சில நாடுகள் வெப்பக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள், மோட்டார் வண்டிகள், குளிர் பதனப் பெட்டிகள் போன்ற "மதிப்பு" பொருள்களைக் கொண்டு வளர்ச்சியை அளவிடுகின்றன.

"பசுமைப் புரட்சி" எனும் பெயரில் உணவு உற்பத்தியை இப்போது மிகுதியாகப் பெருக்கி வருகின்றன.

சிறந்த வகை நெல், கோதுமை, உரம் ஆகியவற்றைப் பயன்படுத்தியதாலும், நீர்ப்பாசனம், பயிர்த்தொழில் விரிவு, கல்வி முதலியவற்றினுலும் உற்பத்திப் பெருககம் ஏற்பட்டது. 1968–1969இல் இந்தியாவின் உணவு உற்பத்தி, 1964–1965லிருந்த 8.9 கோடி டன்னைவிட 80 இலட்சம் டன் அதிகமாக இருந்தது. பாகிஸ்தான் 2 ஆண்டுகளில் கோதுமை உற்பத்தியை 50 சதவீதம் கூட்டியது. சர்க்கரை, காப்பி, தேயிலை போன்றவற்றிலும் இது போன்ற பெருக்கம் ஏற்பட்டுள்ளது. வளர்ச்சியின் வருங்கால வாய்ப்புகள் ஒளிமயமாகத் தோன்றுகின்றன. உழவனும் நம்மைப்போல் மகிழ்ச்சியில் சிரிக்கிறுன், துன்பத்தில் அழுகிறுன், செலவுக்கும் விலைக்கும் கடனுக்கும் ஏற்ப செயலாற்றுகிறுன் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஆகவே இந்த விவசாயப் பெருக்கம் மாயவித்தையினுல் விளைவதன்று. இது நீரைப் பயன்படுத்தும் முறை, நிலச் சீர்திருத்தம், உரம், பூச்சி கொல்லி, கிராம சாலைகள், மண்டல சேமிப்புக் கிடங்குகள், விற்பனை வசதிகள், கடன் போன்ற முழுத் தொழில் நுட்பத்தின் ஒரு பகுதியாகும். இவை அனைத்தும் இப்போது விரைந்து முன்னேற வேண்டும்.

மேலும் நாம் புதிய விவசாயத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும்போது அதனுல் சிறுதர உழவர்கள் தொழிலிழந்து, வருமான ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டு, நிலமில்லாத நகரத் தொழிலாளரெனும் புதிய வகுப்பினர் தோன்றுதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தியாவில் 5 கோடி விளைநிலங்களில் 3 கோடி நிலங்கள் 2 ஹெக்டாருக்கும் குறைவானவை. ஆயினும் அவை மொத்த விளைநிலப் பரப்பாகிய 13 கோடி ஹெக்டாரில் பகுதிதாம். துண்டு நிலங்கள், நில உரிமைப் பாதுகாப்பின்மை, கடன் வசதிக் குறைவு, விற்பனை வசதி போதாமை, விதை உரம் போன்றவை உரிய காலத்தில் பெருமை ஆகிய குறைபாடுகளினுல் வருந்தும் சிறுதர உழவன் புதிய தொழில் நுட்பத்தின் பயனைப் பெரும் அளவுக்குப் பெறுவதில்லை.

அவன் இத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த உரத்திற்கு 4 மடங்கும் நீர்ப்பாசனத்திற்கு 1 மடங்கும், புதிய விதைகளுக்கு 6 மடங்கும், பூச்சி கொல்லிகளுக்கு 12 மடங்கும் அதிகமாக செலவிட வேண்டுமென இந்தியாவில் நிகழ்த்த ஆய்வுகள்காட்டுகின்றன. புதிய தொழில் நுட்பத்தினுல் நிலங்களில் விலை உயர்கின்றது. ஆகாப் அரசன் ஜெஸ்ராஹேலிருந்த நாபாத்தின் திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று "அதைக் கவர" முயன்ற விவிலிய நாடகம் இப்போது நடைபெறுகின்றது.

விவசாயத்திற்கும் தொழில்துறைக்கும் இடையே போட்டியில்லை என்பது கடந்த 10 ஆண்டுகளில் நாம் கற்றுக் கொண்ட மற்றொரு சிறந்த பாடமாகும். பெற்ரோர் எருதுகளை ஓட்டி, எரு திரட்டி, நீர் சுமந்து, தானியம் கொழித்து, ஆடை நெய்து கூடை முடையும்போது, அவர்கள் குழந்தைகள் இயந்திரக் கலப்பை, உரங்கள், விசைக் குழாய்கள், குழாய்கள், மாவு, சிமெண்ட், பதனப் பேழை போன்றவை செய்யும் தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

உலகின் தொழில் வளர்ச்சி 6 சதவீதம் உயர்ந்துள்ளபோது ஏழை நாடுகளில் 7 சதவீதம் உயர்ந்துள்ளது. அயல் நாட்டுச் செலாவணி, உள்நாட்டுத் திறமை, சிறுதர உள்நாட்டுச் சந்தைகள், வளர்ச்சியுற்ற நாடுகள் அமைத்துள்ள வாணிபத் தடைகள் போன்ற குறைகள் இருப்பினும் இவ்வுயர்வு ஏற்பட்டுள்ளது.

ஆயினும் ஏழை நாடுகளின் தொழில் வளர்ச்சிக் கொள்கையில் இப்போது மாற்றம் ஏற்பட வேண்டும். இறக்குமதிப் பதிலீட்டு வாய்ப்புகள் குறைந்து வருகின்றன. பளுவான இறக்குமதி வரிகளுடன் உயர்ந்த செலவில் தாழ்ந்த தரப் பொருள்களைச் செய்ய வேண்டிய நிலை இந் நாடுகளுக்கு

பிறப்பு விகிதமும் பொருளாதார வளர்ச்சியும்

ஏற்பட்டுள்ளது. இன்று இந் நாடுகளில் தொழில் காப்பினால் உற்பத்திச் செலவு உயர்கின்றது.

1965இல் ஏழை நாடுகள் தமது உள்நாட்டு நிதிவளத்தில் 210 கோடி டாலர் செலவழித்து மோட்டார் வண்டிகளும் பிற இயக்கவிசைப் பொருள்களும் செய்தன. ஆனால் இவற்றின் பன்னாட்டு மதிப்பு 80 கோடி டாலர்தாம். ஓராண்டில் வீணான இந்த 130 கோடி டாலர், உலக வங்கி 23 ஆண்டுகளில் தொழிலில் முதலீடு செய்த மொத்த தொகையை விட அதிகம். ஆகவே தக்க தொழில் நுட்பத்தை தெரிந்து கொண்டு ஏற்றுமதிக்கேற்ற பொருள்களை உற்பத்தி செய்யும் வண்ணம் தொழில் கொள்கையை மாற்றவேண்டும் என்பது இதினின்று தெளிவாகிறது.

ஏழை நாடுகள் உலக வாணிபத்தில் பெறும் பங்குதான் அவற்றின் வளர்ச்சியை வகுக்கும் (உண்மையில் அழிக்கும்) புறக் காரணங்களுள் முக்கியமானதாகும். 1953இல் இந்நாடுகளின் பங்கு 27 சதவீதமாக இருந்தது; 1967இல் 19 சதவீதமானது. இவை இயல்பான சிறப்பு பெற்றுள்ள மூலப் பொருள்களில் கூட 54 சதவீதம் 42 சதவீதமாகக் குறைந்தது. உண்மையில் 1967இல் வளர்ச்சியுறும் நாடுகள் தமது வாணிகத்தை 2 சதவீதம் கூட பெருக்கவில்லை.

அவற்றின் ஏற்றுமதிகள் உள்நாட்டின் மொத்த ஆக்கத்தில் 35 சதவீதம் தான். இஃது அவை தமது வளர்ச்சிக்காக உலக வாணிகத்தைப் பெரிதும் நம்பியுள்ளன என்பதைக் காட்டுகின்றது. அவற்றின் வாணிகமும், ஏற்றுமதியும் குறைந்து கொண்டே வந்துள்ளன. இதற்கு ஒரே வகை ஏற்றுமதிப் பொருளை நம்பி இருத்தலும், உற்பத்திக்குறைவும் மட்டுமல்லாமல், அவற்றின் பொருட்களின் பன்னாட்டு விலைகளின் குறைவும் வளர்ச்சியுறும் நாடுகளின் வாணிக கொள்கைகளும் காரணமாகும்.

வளர்ச்சியுற்ற நாடுகளில் மக்களின் விருப்பங்களில் ஏற்படும் மாறுதல்கள் தொழில் நுட்ப மாற்றங்கள், அரசாங்கத்தின் உற்பத்தி, வாணிக கொள்கைகள் ஆகியவற்றின் காரணமாக, வளர்ச்சியுறும் நாடுகளின் ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் குறைந்து அதனால் அவற்றின் உலக வாணிகப் பங்கும் ஏற்றுமதி ஊதியமும் குறைய, அவை இறக்குமதி செய்யும் முதற்கருவிகளின் விலைகள் குறைந்து அவற்றின் வாணிப மாற்று வீதம் நலிகின்றது. ஆகவே ஏழை நாடுகளின் வளர்ச்சிக்கு வளர்ச்சியுற்ற நாடுகளின் உதவியை விட அவற்றின் வாணிக கொள்கையே முக்கியமானதாகும்.

ஐ. நா. வாணிக வளர்ச்சி மாநாடுகள் (UNCTAD) சிறந்த பொதுக் கொள்கைகளை வகுத்துள்ள போதிலும், ஏழை நாடுகளிலிருந்து மூலப் பொருள்களையும், பொறி செய் பொருள்களையும், வரியின்றி எதிரீடற்ற சலுகை முறையில் இறக்குமதி செய்யவும் அவசர இருப்பை அமைக்கவும் இழப்பீட்டு நிதியைப் பெருக்கவும் வளர்ச்சியுற்ற நாடுகளுக்கெனத் திட்டம் வகுக்கவில்லை. புது டெல்லியில் கூடிய 2–வது ஐ. நா. வாணிக வளர்ச்சி மாநாட்டில் வளர்ச்சியுற்ற நாடுகள் தமது ரொக்கநிலை வருமான வளங்கள், வாணிக சமநிலை ஆகியவை பற்றியே ஆய்ந்தன. உலக வாணிகப் பெருக்கமே இப் பிரச்சினைகளைத் தீர்க்க தக்க வழியாகும். உலக வளர்ச்சி நிலையில் மக்கள் தொகை பெருக்கத்தினால் துயர் நிழல் படர்கின்றது. மக்கள் எண்ணிக்கை பெருக்கமே பன்னாட்டு வளர்ச்சி வாய்ப்பினை மிகுதியாகப் பாதிக்கின்றது. மனிதனின் புனிதத் தன்மை, மதிப்பு, உயிர், சுதந்திரம், மனித நலன்சார்ந்த உரிமைகள் ஆகிய கோணங்களிலிருந்தே இந்த அவசரமான சிக்கலான பிரச்சினையை நோக்குகிறேன். என்பதை தெளிவாக எடுத்துரைக்க விரும்புகிறேன்.

நாம் ஏற்கனவே பார்த்ததுபோல் நோய் பரவுதல் குறையவே இறப்பு வீதம் குறைந்துள்ளது. இந்த மனித நல சாதனைக்கு நாம் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். ஆனால் பிறப்பு வீதம் மாறாமல் இருப்பதால் வளர்ச்சியுறும் நாடுகளில் மக்கள் தொகை மிகுதியாக பெருகி வருகின்றது. இங்கு மக்கள் தொகை வளர்ச்சியுற்ற நாடுகளைப் போல் இருமடங்கு பெருகுகின்றது.

ஏழை நாடுகளில் மக்கள்தொகை 1930–1950இல் ஆண்டுக்கு 1.5 கோடியும் 1950–1960இல் 2.8 கோடியும், 1960–1965இல் 3.7 கோடியும் உயர்ந்தது. இதனால் உலக மக்கள் தொகை 1970 இல் 360 கோடியும் 1980இல் 440 கோடியும் 1985இல் 500 கோடியுமாக உயரும்.

இதனால் வளர்ச்சியில் ஏற்படும் விளைவுகளை இப்போது தொடங்கியுள்ள 10 ஆண்டுகளில் காணலாம். அவை வருமான ஏற்றத் தாழ்வுகள், நிலங்களின் விலை உயர்வு, வேலையின்மைப் பெருக்கம், உணவூட்டக் குறைவு, கூலி குறைவு போன்றவையாகும். இதனால் இளைஞர், கல்வி, நகரங்கள் சார்ந்த பிரச்சினைகள் மலியும்.

வளர்ச்சியுறும் பகுதிகளில் வாழும் மக்களில் 70 சதவீதம் பேர் வாழும் நாடுகளில் குடும்ப நலத் திட்டத்தை பரப்பும் வழிகள் கையாளப் படுகின்றன. ஆனால் பிறப்பு வீதத்தை சமநிலைப் படுத்தச் செய்யும் திட்டங்களுக்கு பல தடைகள் உள்ளன. காலம், பொருள்கள் கிடைக்காமை, நாட்டுப் புறங்களில் தோன்றும் உளவியல், சமூக எதிர்ப்புகள் இத் தடைகளாகும்.

இதற்கிடையில் வேறு இரு மக்கள் தொகைப் பிரச்சினைகள் நமது கவனத்தை ஈர்க்கின்றன. முதலாவது, ஏழை நாடுகளின் நகரங்களின் பிரச்சினை அவை வறுமைப் பண்பாட்டை உருவாக்கி வருகின்றன. 1950–1959இல் நகர மக்கள் தொகை 50 சதவீதம் உயர்ந்தது. இப்போது அஃது இரு மடங்காக உள்ளது; கி.பி. 2000இல் 500 சதவீதமாக உயரும். இந்திய நகர் ஒன்றில் சேரிகளில் 3 கோடி பேர் வாழ்வர். அரசியல் வாதிகள் நகரச் சேரிகளை கவனித்து நாட்டுப்புற வறுமையைக் கவனியாதிருப்பதைப் பார்த்தால், வறுமையானது கொடுமையாக இருக்கும் போது மட்டுமல்லாமல், வெளிப்படையாகத் தெரியும் போதுதான் கவனத்தை ஈர்க்கின்றது என்று சொல்லாமல்லவா?

இரண்டாவது, மக்கள் தொகையில் இளம் பருவத்தினர் மிகுதியாக உள்ளனர். பொதுவாக வளர்ச்சியுறும் நாடுகளில் மக்கள் தொகையில் 60 சதவீதம் பேர் 25 வயதிற்கு குறைந்தவர்கள். நான் அண்மையில் சென்ற ஒரு நாட்டில் மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் 18 வயதும் அதற்கு குறைவாகவும் இருந்தனர். பெரும்பான்மையினருக்கு உணவு, உடை, கல்வி அறப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய சிறுபான்மையினரின் தொகை குறைந்து வருகின்றது. அடுத்த தலைமுறையின் பண்புத் திறத்திற்கும் ஆன்மீக வாழ்விற்கும் ஆபத்து விளைந்துள்ளது.

உலக வாணிக சமநிலைக் குறைவினால் மூன்றாவது உலகின் பொருளாதார வளர்ச்சி நடை பட்டுள்ளது. ஏழை நாடுகள் தமக்குத் தேவையான பொருள்களுக்கும் இயந்திரங்களுக்கும் அதிக விலை கொடுத்த போதிலும் பன்னாட்டு வாணிகத்தில் அவை பெறும் பங்கும், அவற்றின் ஏற்றுமதிப் பொருள்களின் விலையும் குறைந்து விடுகின்றன. இலத்தின் அமெரிக்காவில் கட்டடம் கட்டப்படும் இடமொன்றைப் படத்தில் காணலாம்.

Photo © Ian Berry Magnum, Paris

② அடுத்த பத்தாண்டுகளில் இன்னொரு வாய்ப்பு

நாம் இங்கிருந்து எங்கு செல்கிறோம்? பன்னாட்டு ஒப்புரவின் விளைவாக இப்போது நாம் இரண்டாவது வளர்ச்சிப் பத்தாண்டை எதிர்நோக்கி நிற்கின்றோம். இஃது இன்றைய நிலையிலிருந்து முன்னேற நமககு மற்றொரு வாய்ப்பாகும். வளர்ச்சியுறும் நாடுகளுக்கும் வளர்ச்சியுற்ற நாடுகளுக்கும், நமது கிராம உலகத்திற்கும், உலக சமுதாயத்திற்கும் தேவையான பணித் திட்டம், (ஓர் ஆய்வு கூறுவதுபோல்) வியத்தகு தெளிவுடன் வெளிப்பட்டு வருகின்றது.

வளர்ச்சியுறும் நாடுகள் தமது உள்நாட்டு மொத்த ஆக்கம் ஆண்டுக்கு 6 முதல் 7 சதவீதம் வளரத் திட்ட மிட்டுள்ளன. இதனால் தலா வருமானம் 3.5 முதல் 4.5 வரை உயரும். இதற்கு வருமானப் பங்கீடு அமைப்பு மாற்றம், நிலச் சீர்திருத்தம், வேலை வாய்ப்பு, மக்கள் தொகை கொள்கை போன்ற திட்டங்கள் துணை செய்ய வேண்டும். 6 முதல் 7சதவீத உயர்வுக்கு ஆதாரமாகவும் பெருகும் மக்கள் தொகைக்கு உணவளிக்கவும் உணவூட்டத்தை வளர்க்கவும், தொழில் துறைக்கு மூலப் பொருள்களை அளிக்கவும், உள்நாட்டு விலைவாசியைக் குறைக்கவும் வாணிக சமநிலை நெருக்கடியைத் தணிக்கவும் விவசாயத் துறை 4 சதவீதம் பெருக வேண்டும்.

சிறுதர உழவர்களின் வளர்ச்சி நிறுவனம் போன்ற தனி நிறுவனங்களை நிறுவி அவற்றின் வாயிலாக சிறுதர உழவர்கள் புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தத் துணை செய்ய வேண்டும். இந்நிறுவனங்கள் 3 முதல் 5 ஏக்கர் வரையுள்ள நிலத்தை வள நிலங்களாக மாற்ற துணை செய்யும். இந்தியாவில் இரு உணவு நெருக்கடி ஆண்டுகளில் நிகழ்ந்ததுபோல் உணவு உற்பத்தி குறையுமானால், வளர்ச்சியுற்ற நாடுகளில் 1 சதவீத வரையறைக்கு மேல் உணவு உதவி வழங்க வேண்டும். அஃது உணவுப் பெருக்கத் தடைகளையும், பொது நல ஏற்றத் தாழ்வுகளையும் தவிர்க்கும்.

தற்கால வளர்ச்சிக்கு மூல பலமான தொழில் துறை ஆண்டுக்கு 8 முதல் 9 சதவீதம் வளர வேண்டும். உள்ளமைப்பிலும் போதிய வளர்ச்சி ஏற்பட வேண்டும். சேமிப்பு 15 முதல் 20 வரை உயர்வதற்காக பொருள் நுகர்வு உள்நாட்டு மொத்த ஆக்கத்தை விட குறைவாக உயர வேண்டும். வேலைவாய்ப்புத் திட்டங்

Photos David Robison © Parimage (C.P.), Paris

களின் வாயிலாகூ புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். வரி விதிப்பு, நாணயம், வாணிகம் ஊதிய ஊக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

உள்நாட்டு மொத்த ஆக்கத்தில் 5 முதல் 6 சதவீதம் வரை செலவு செய்து எல்லா வகை கல்வியையும் அளவிலும் தரத்திலும் வளர்க்கவேண்டும். இதைப் பற்றி பிறகு பார்ப்போம். ஆராய்ச்சிக்கென இன்னும் ஒரு சதவீதம் செலவிட வேண்டும். சுகாதார நிலையைச் சீர்திருத்தி, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நன்கு செயல்படுத்த வேண்டும்.

வளர்ச்சியின் நோக்கமும் வழிகளுமான மாறும் மனப்பான்மை, செயல் நோக்கம், சட்ட சீர்திருத்தங்கள், சமூகப் பணிகள் ஆகியவற்றின் வாயிலாக வளர்ச்சிக்கென நாட்டில் பொதுவான புதிய நிறுவன அமைப்பை உருவாக்க வேண்டும்.

வளர்ச்சியுற்ற நாடுகள் தமது உள்நாட்டு மொத்த ஆக்கத்தை ஆண்டுதோறும் 4 (3.7–4.2) சதவீதமும் தலா வருமானத்தை 3 சதவீதமும் வளர்க்க முயல வேண்டும். தமது வறுமையான பகுதிகளை வளப்படுத்துவதே அவற்றின் முதல் வேலை. ஆனால் இத்துடன் அவை நின்றுவிடக் கூடாது.

வளர்ச்சியுற்ற நாடுகள் மூன்றாவது உலகின் வளர்ச்சிக்கு வாணிகத்துறையில்தான் மிகச் சிறந்த பணியாற்ற முடியும். அவை வளர்ச்சியுறும் நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிகளுக்கு சலுகை அளித்து, இறக்குமதி வரிகளையும் பங்களவுகளையும் ஒழித்து அல்லது மிகுதியாக குறைத்தாவது கென்னடி திட்டத்தைப் பின்பற்ற வேண்டும். இதனால் அவற்றிற்கே நன்மை விளையும். ஏனெனில் இது தராதர செலவில் நலனளிப்பதுமல்லாமல் பண வீக்கத்தை உண்டு பண்ணும் உயர் விலையுள்ள விவசாய, கருவி செய் பொருள்களைக் குறைக்கும். இது வளர்ச்சியுறும் நாடுகள் 6 முதல் 7 சதவீத குறியிலக்கை அடைவதற்கு தமது இறக்குமதியை ஒரு சதவீதம் உயர்த்த உதவும்.

கடன் குறைப்பு பளுவானது ஏழை நாடுகளின் வளர்ச்சி வாய்ப்புகளை அரித்து வருகின்றது. அது 1967இல் 470 டாலராக அதாவது ஏற்றுமதியில் 15 சதவீதமாக இருந்தது (இந்தியாவிலும் பிரேசிலிலுலும் 30 சதவீதமாக உயரும்) 1971இல் அது 920 டாலராகப் பெருகும். இரண்டாவது பத்தாண்டு தொடக்கத்தில் இப்பளுவை நீக்க நீண்ட காலத் திட்ட்டங்களும் உதவி திட்டங்களும் வகுக்க வேண்டும்.

பண உதவியைப் பொறுத்த வரையில் நாட்டு வருமானத்தில் 1 சதவீதம் அளிக்க நாடுகள் இசைந்துள்ளன. இது மானியம், கடன் போன்ற அரசாங்க உதவி, பலமுக உதவி ஆகிய குறியிலக்கில் 70 முதல் 75 சதவீதமாகும். பியர்சன் குழு குறிப்பிடுவது போல் இஃது இலவசத் திட்டமன்று.

இது வழங்கப்படும் வகையையும், நோக்கத்தையும் பார்க்கும்போது,, இங்கு 'உதவி' என்ற சொல்லையும் பயன்படுத்தத் தயங்குகிறேன்.

45 இலட்சம் மக்கள் தொகையுள்ள ஓர் உறுப்பு நாட்டிற்கு அயல் நாட்டு உதவித் திட்டங்கள் 20 வகையான இயந்திரக் கலப்பைகளை அளித்துள்ளன. (இதன் விளைவாக அவற்றைப் பழுது பார்க்கவோ தனி உறுப்புகளைச் செய்யவோ முடியவில்லை), அத்திட்டங்கள் அந் நாட்டின் முதலீட்டில் 50 சதவீதம் அளிப்பதுடன் உள்நாட்டின் உற்பத்தித் திட்டங்களுக்கும் இலாப வாய்ப்புகளுக்கும் ஏற்ப அதன் வளர்ச்சியின் இயல்பையும் காலத்தையும் திட்டமிடுகின்றன

பிரச்சினைகளின் காரணமாக உதவித் திட்டங்களை ஒருங்கிணைத்து அரசாங்க உதவியை அதிகரிக்க வேண்டும். அதாவது உதவியின் அளவையும் தரத்தையும் உயர்த்தவேண்டும். இதைச் செய்வதற்கு அரசாங்க உதவியை இப்போதுள்ள 630 கோடியிலிருந்து 1972–1975க்குள்ளாக 1,600 முதல் 1,900 கோடி டாலராக உயர்த்தி அதன் தரத்தையும் உயர்த்த வேண்டும்.

உதவி என்பது லஞ்சமோ அறக்கொடையோ அன்று. நாம் சுருங்கி வரும் உலகில் வாழ்கின்றோம். ஒவ்வொருவரின் நலத்திலும் அருகில் உள்ளவர் அனைவரும் அக்கறை கொள்ள வேண்டும் என்ற உண்மையின் அடிப்படையில் உதவித் திட்டங்கள் அமைந்துள்ளன.

இரண்டாவது வளர்ச்சிப் பத்தாண்டின் பன்னாட்டு அமைப்பில் மனிதனும் அவனது வளப் பொருள்களும் அவன் பெற விழையும் கல்வியும் நடுவிடம் பெற்றுள்ளன. வளர்ச்சியின் நோக்கம் மனிதன் என்பதையும், அவனே அதன் இயக்க ஆற்றலும் அமைப்பாளனாகவும் ஆவான் என்பதையும் நாம் மறக்கலாகாது.

கல்வியும் பயிற்சியும் பெற்று வளர்ச்சி இயக்கத்தோடு ஒன்றிணைந்த மக்களாகிய வளப்பொருள்களை இடையறாது வளப்படுத்துவதே அத்தகைய வளர்ச்சியின் முக்கிய இயல்பென யுனெஸ்கோ கருதுகிறது.

இதற்கேற்ப கல்வி முறை முழுவதையும், மக்களையும் அறிவியலையும், தொழில் நுட்பத்தையும், செய்தியையும், பண்பாட்டையும் வளர்க்கும் நிறுவனங்களையும் உலக நோக்குடன் பார்க்க வேண்டும். அதற்கு மரபான மதிப்பீடுகளை விடுத்து, பரந்த பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்தி



மணலில் பள்ளிக்கூடம்: பல நாடுகளில் குழந்தைகள் மணலில் கோட்டைகள் கட்டுகின்றனர். ஆனால் சூடான் கிராம குழந்தைகள் தாம் கற்றுக் கொண்ட எழுத்துக்களையும் வாக்கியங்களையும் மணலில் எழுதுகின்றனர் (மேல் படம்). வளர்ச்சியுறும் நாடுகள் கல்விக்காக அதிகமாக செலவு செய்த போதிலும், இன்னும் பல கோடி குழந்தைகள் வகுப்பறைகள், ஆசிரியர்கள், கல்விச் சாதனங்களின்றி இருக்கின்றனர். இதற்கு மாறாக தொழில் வளர்ச்சியுற்ற நாட்டிலுள்ள இந்த வகுப்பறையில் தொகுதி முறையில் கற்கும் "புதிய கணித"த்தை சிறுவர் கற்கின்றனர். 20 ஆண்டுகளுக்கு முன் இம் முறையை ஆராய்ச்சி வல்லுநர்கள் பயன்படுத்தினர்.

Photo Derek Bayes © Parimage (C.P.) Paris

கல்வியில் உலகப் பொது நோக்கு

மனித வளர்ச்சியின் செயல் முறைத் தொடர்புகளை அச்சமின்றி ஆய்ந்து அதில் சமநிலை வளர்ச்சிக் கொள்கைகளைப் பயன்படுத்த வேண்டும்.

இப் பத்தாண்டில் உருவாகிய கல்வி முறையில் காணப்படும் பயனழிவுகள் குறைபாடுகள், பொருத்தமின்மை, பயன்படாத் திறமைகள், வழக்கற்றுப்போன இயல்புகள், வேலை அளிக்கவியலாக் கல்வி எல்லாம் இரண்டாவது பத்தாண்டின் தொடக்கத்திலும் காணப்படுகின்றன.

பொருளாதார நெருக்கடியும், மக்கள் தொகைப் பெருக்கத்தையும் நாம் தீர்க்க வேண்டி இருப்பதுபோல், கல்விக்கும் சமூகத்திற்கும் இடையே புதிய தொடர்புகளை உருவாக்க வேண்டியிருக்கிறதென நம்புகிறேன், மனித வளர்ச்சித் திட்டம் பொருளாதார வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து அதற்கு உட்பட்டு இருக்க வேண்டுமென்ற தத்துவத்தின் அடிப்படையிலே இப்பிரச்சினைகள் அமைந்துள்ளன.

உற்பத்தித் திறனை வளர்ப்பதற்காக பொதுக் கல்விக்குப் பதிலாக தனிப் பயிற்சி அளிக்க வேண்டுமென்றும் உடல் உழைப்பற்ற தொழிலாளரை உருவாக்கும் வண்ணம் கல்வி அமையாமல் அறிவியல், பொறியியல்; இன்னும் இயந்திர மயமாகும் சமூகத்திற்கு தேவையான நடைமுறைக் கல்வி ஆகியவற்றைக் கற்பிக்கும் கல்வி முறை தேவை என்றும் அண்மையில் நிகழ்ந்த பொருளாதார ஆய்வு கூறுகின்றது.

ஆனால் உண்மை இதுவன்று. பொருளாதாரத் திட்டம் மனித வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து அதற்குட்பட்டிருக்க வேண்டும். கல்வி கற்றோர் வேலையின்றி இருப்பதை தவிர்ப்பதற்காக கல்வியை குறைக்கலாகாது. ஏனெனில் அப்போது கல்வி பெறாதவர்கள் வேலையின்றி இருப்பர்.

நாம் ஏற்கெனவே பார்த்ததுபோல் பெருகிவரும் வேலையின்மை பிரச்சினையைத் தீர்க்க குறுகிய கால வழிகள் கிடையா. ஆயினும் பொருளாதாரத்தைக் கல்வி முறையுடன் இணைத்தால், கல்வி கற்றவன் அரசாங்க அல்லது தனியார் துறை உதவியுடன் தானே தனது வேலையை வகுத்துக் கொள்வான், வகுத்துக் கொள்ளவும் முடியும். நன்கு கல்வி கற்றவர்கள் இரண்டாவது பத்தாண்டுக் காலத்தில் வேலை வாய்ப்புகளைப் பெருக்கவும் வேலையின்மையை ஒழிக்கவும் சிறந்த கருவிகளாகப் பயன்படுவர். கல்வியும் பொருளாதாரமும் ஒருங்கிணைந்து வளர வேண்டும்.

பொருளாதாரத் திட்டத்தையும் மனித வளர்ச்சியையும் ஒருங்கிணைக்கும் இக் கருத்துக்கு ஆதாரமாக அமெரிக்காவில் ஜே. எஸ். கோல்மனும் ஸ்வீடனில் டி. ஹியூசனும் அண்மையில் நிகழ்த்திய ஆய்வுகளை இங்கு குறிப்பிடுகிறேன். பள்ளியில் மாணவர் படிப்பதற்கு ஆசிரியரோ அவரது தகுதிகளோ (அவை வேறு காரணங்களுக்காக உயர்ந்ததாக இருக்க வேண்டும்) அல்லது ஆய்வுக்கூட கருவிகளோ காரணமல்ல, (அக்கருவிகள் அறிவியல் உண்மையைக் காண்பதற்காக தற்காலக் கருவிகளாக அமைய வேண்டும்) பள்ளி அமைந்திருக்கும் பொருளாதார, சமூக சூழ்நிலையின் இயக்க ஆற்றல் அல்லது மந்தமே இதற்கு காரணம்.

இது நமக்கு கல்வியின் சமுகப் பணி சமூகத்திற்கு கல்வியின் தேவையையும் நினைவூட்டுகின்றது. கல்வி வளர்ச்சியுடன் இணைந்து நிற்கின்றது. பள்ளியும், முதியோர் கல்வி நிலையமும் வளரும் சமூகத்தின் நடுவில் இருக்கும்போது, அவை மாற்றத்தை உண்டுபண்ணும் ஆற்றலாக விளங்குகின்றன. ஆனால் இதற்கேற்ப சமூகத்தில் கல்வியின் விளைவானது வளர்ச்சி சார்ந்த கல்வியைத் தூண்டும் சமூக, பொருளாதார நிறுவனங்களைச் சார்ந்திருக்கின்றது. நாம் செய்தித் தொடர்பு சாதனைகளை நன்கு பயன் படுத்தாமல் இருப்பதாலும் தவறாகப் பயன் படுத்தவதாலும் வளர்ச்சிக்கு ஏதுவான சிறந்த வாய்ப்புகளை இழந்து விடுகிறோம். இக்கருவிகள் கொள்கைகளைப் பரப்புவதற்கும் போலி பொழுது போக்குகளுக்கும் பயன்படுகின்றன.

ஆகவே கல்வி ஒவ்வொரு சமூகத்திற்கு மேற்ப அமைவதோடல்லாமல் அதை மாற்றவும் செய்ய வேண்டும். அதற்கு கல்வி (இன்றிருப்பது போல் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொடுத்து மனப்பாடம் செய்யும் முறையாக இராமல்) வாழ்நாள் கற்கும் முறையாகவும், திறமைகளைக் கற்கவும் கற்கும் திறமை பெறவும் ஏற்றதாகவும் அமைய வேண்டும். இதனால் ஏற்கெனவே இருக்கும் அல்லது உருவாகக் கூடிய குறிப்பிட்ட வேலைக்கான குறிப்பிட்ட பயிற்சியை எவரும் வாழ்நாளில் பெறமுடியும்.

வாழ்நாள் முழுவதும் கற்கும் இக் கல்வியின் முக்கிய கருத்து கல்வித் தத்துவத்திலும் கல்விக்கான உதவியிலும் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தத் தூண்டும். இதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். இரண்டாவது வளர்ச்சிப் பத்தாண்டில் தொடங்கப் பெற்ற பன்னாட்டுக் கல்வி ஆண்டு, முறைகளை ஆய்வதிலிருந்து திட்டச் செலவை ஆய்வது வரையில் நிகழும் கல்வித் திட்டத்தில் காணப்படும் புதுக் கருத்துகளுடன் இக் கருத்தையும், பள்ளிக்குப் புறம்பான கல்வியிலும் புதிய முறைகளிலும் பாடத் திட்டங்களிலும் பயன்படுத்தத் தொடங்கும்.

கல்வியின் பொருளும் முறைகளும் இப்பத்தாண்டின் தேவைகளுக்கும் உணர்வுக்கும் பொருத்தமாக இருக்குமிடங்களில் புதிய கல்வி முறைகளை வகுக்கவேண்டும். கல்வியில் சீர்திருத்தம் காண செயலாய்வுகளைச் செய்து அவற்றை மதிப்பிட்டுப் பார்ப்பதே ஒரே வழியாகும். இதற்கு துணிகரத் திட்டங்களைப் பயன்படுத்த வேண்டும். பள்ளியின் உள்ளும் புறமும் புதிய முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

பங்கு பெற விழையும் இன்றைய ஆவலை, தனக்கே உதவி செய்து தன்னைப் புதுபிக்கக் கற்றுக் கொள்ளும் முறைகளில் புகுத்த வேண்டும். சுருங்கச் சொன்னால் புதுவழி அமைக்க வேண்டும். ஆனால் இப்புதிய வழி திறமைக்கும் அறிவுக்கும் விடுதலை அளித்து, சமூக பொருளாதார நீதியை நிறுவ வேண்டும். அப்போதுதான் வளர்ச்சி மனிதனுக்குப் பயன்படும்.

இதனால், முதல் பத்தாண்டுக் காலத்தில் சுகாதாரத்தாலும் விவசாயத்திலும் ஏற்பட்டது போன்ற ஒரு தொழில் நுட்பப் புரட்சியாவது பத்தாண்டுக் காலத்தில் கல்வித் துறையில் ஏற்படுமா? ஏற்படுமென்று ஆவலுடன் நம்புகிறேன்.

இளைஞர்களின் அறிவெல்லையை விரிவடையச் செய்து, புதிய நிலைகளுக்கேற்ப மாறும் திறமையளித்து, புதியவை புனைவதிலெல்லாம் அவர்களையும் பங்குபெறச் செய்வதே கல்வியின் மாபெரும் பணியாகும். அவர்கள் கல்வி அமைப்புகளைக் கொளுத்துவதை விட அதிக வேகத்தில் கல்வி அவர்களது கற்பனைத் திறத்தைக் கொழுந்து விட்டெரியச் செய்ய முடியுமா? அவர்களுக்குப் போதிய தூண்டுதல்கள் இல்லையெனில் நாமே நாம் சொல்வதற்கேற்ப நடக்கவில்லையென்பதை அவர்கள் காண்பார்களென்றால், நாம் உருவாக்கி ஆதிக்கம் செலுத்தும் சமூகம் நாம் வருணிக்கும் சமூகத்தினின்று வேறுபட்டிருக்குமாயின், நாம் இளைஞர்களைக் குறிப்பிட்ட திசைகளில் ஆற்றுப்படுத்த முடியவோ, எல்லாத் துறைகளிலும் பங்கு பெறச் செய்யவோ முடியாது.

நாம் அமைதியை ஆதரிக்கிறோம்; போரைத் தொடங்குகிறோம் அல்லது அனுமதிக்கிறோம். சமத்துவம்பற்றிப் பேசிக் கொண்டே ஏற்றத்தாழ்வுகளின் பலன்களைத் துய்க்கிறோம். வாழ்க்கைத் தொழில் கல்வியை வலியுறுத்துகிறோம். ஆனால் நமது குழந்தைகளை பல்கலைக் கழகப் பட்டப் படிப்பிற்கு அனுப்புகிறோம். நமது இளைஞர் கற்பனை செய்து பார்க்க முடியாததும் முழுப்பற்றுக் கொள்ள இயலாததுமான ஒரு சமூகத்திற்கென நாம் கல்வித் திட்டமொன்றை பயனுள்ள வகையில் அமைக்க முடியாது. ஆகவே கல்வி வாய்ப்புகளில் உண்மையான சமத்துவத்தை வலியுறுத்திச் செயலாற்றுவோமானால், நமது சமூகத்தை மாற்றியமைக்கவல்ல இளைஞர்களை உருவாக்க முடியுமல்லவா?

மால்கம் எஸ். ஆதிசேஷையா யுனெஸ்கோவின் துணைப் பொது இயக்குநர் ஆவார். 1948-இல் இந்நிறுவனத்தில் சேர்ந்த இவர் இவ்வாண்டின் இறுதியில் ஓய்வு பெறுகிறார். பிறகு நாம் நிறுவும் சென்னை வளர்ச்சி ஆய்வு நிலைய இயக்குநராகப் பொறுப்பேற்பார். இந்நிலையம் தென்னிந்தியாவின், சிறப்பாக தமிழ் நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சிப் பிரச்சினைகளை ஆயும். தமிழ் நாட்டில் பிறந்த டாக்டர் ஆதிசேஷையா இந்தியாவிலும் பிரிட்டனிலும் கல்வி பயின்றார். யுனெஸ்கோவில் சேருமுன் சென்னை கிறித்துவக் கல்லூரியில் பொருளாதாரத் துறைத் தலைவராகவும் கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பொருளாதார விரிவுரையாளராகவும் பணியாற்றினார். யுனெஸ்கோவின் முதல் வளர்ச்சி உதவி திட்டத்தைத் தொடங்கினார் அதிலிருந்து வளர்ச்சி பற்றிய பிரச்சினைகளிலே பெரிதும் சடுபட்டு வந்துள்ளார்.



Photo UNRWA

பாலஸ்தீன் அகதி குழந்தைகள் பயிலும் பள்ளிகளில் மிகுந்த நெருக்கம் காரணமாக மாற்று முறைப்படி வகுப்புகள் நடக்கின்றன. இங்கு ஜோர்டனில் அம்மான் அருகிலுள்ள பாக்கா முகாமில் முன்னிலைத்து அமைக்கப் பெற்ற பள்ளியில் சிறுவர் இடம் மாறுகின்றனர். மத்திய கிழக்கு நாடுகளில் ஐ. நா. துயருதவி நிறுவனமும் யுனெஸ்கோவும் சேர்ந்து நடத்தும் பள்ளிகளில் 2,20,000 அகதி சிறுவர் பயில்கின்றனர். 83,000 சிறுவர் மாற்று முறைப் பள்ளிகளிலும், 10,500 சிறுவர் கூடாரங்களிலும் தற்காலிக கட்டடங்களிலும் படிக்கின்றனர்.

பாலஸ்தீன் அகதிப் பள்ளிகளின் நெருக்கடி நிலைமை

மத்திய கிழக்கு நாடுகளின் நெருக்கமான அகதி முகாம்களின் மூன்றாம் தலைமுறையாகப் பிறந்த பாலஸ்தீன அராபிய அகதி குழந்தைகள் இப்போது நடக்கத் தொடங்கியுள்ளனர். இக் குழந்தைகளின் பெற்றோரும் இதே முகாம்களில் பிறந்தவர்கள். ஆண்டு தோறும் அகதிகளுக்கு 55,000, குழந்தைகள் பிறக்கின்றன. இக்குழந்தைகளுடன் 1967ஆம் ஆண்டின் 6 நாள் போருக்குப் பிறகு வந்த அகதிகளையும் சேர்த்தால், 1948ஆம் ஆண்டு போரில் வெளியேறி, ஐ. நா. துயருதவி நிறுவன உதவிபெற்ற பாலஸ்தீன அராபியரின் தொகை 9 இலட்சத்திலிருந்து 14 இலட்சமாக உயர்ந்து விடும்.

அகதிகளுக்கு உணவு, உறைவிடம், உடை, உடல்நலம், கல்வி அளிப்பதற்காக 1949இல் ஐ. நா. துயருதவி நிறுவனம் அமைக்கப்பட்டது.

இன்று அகதிகளில் ஏறக்குறைய 700,000 பேர் 18 வயதுக்குட்பட்டவர்கள். இதன் விளைவாக கல்வி அளிக்கும் பொறுப்பு அதிகரித்து வருகின்றது. ஐ. நா. துயருதவி நிறுவனத்தின் நிதியில் 43 சதவீதம் ஆண்டுதோறும் இதற்காக செலவிடப்படுகின்றது. இத்தொகை உணவு, உடை, உறை விடத்திற்காக செலவிடப்படும் தொகையை விட கொஞ்சம்தான் குறைந்தது.

கல்வித் துறையில் யுனெஸ்கோ பெரும் பங்கு ஏற்க வேண்டியிருக்கிறது. அது கல்வித் திட்டத்திற்கான பொறுப்பை ஏற்பதுடன், அத்திட்டத்தை வகுப்பதிலும் செயல்படுத்துவதிலும் அறிவுரை வழங்கவல்ல உயர்தர இயக்குநர்களையும் வல்லுநர்களையும் தனித்துறை ஆசிரியர்களையும் அளிக்கின்றது.

ஐ. நா. துயருதவி நிறுவனமும் யுனெஸ்கோவும் சேர்ந்து நடத்தும் கல்வித் திட்டத்தினால் 2,97,000 குழந்தைகள் பயன்பெறுகின்றனர். அவர்களுள் 2,20,000 குழந்தைகள் ஜோர்டன், லெபனான், சிரியா, காஸா பகுதி ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ள 480 ஐ. நா. துயருதவி நிறுவன, யுனெஸ்கோ தொடக்கப் பள்ளிகளிலும் முதல் நிலை நடுத்தரப் பள்ளிகளிலும் பயில்கின்றனர்.

வலப்புறம்: ஜோர்டானில் அம்மான் அருகில் பாலஸ்தீன் அகதிகளுக்கான பாக்கா "நகர முகா"மின் மலையுச்சி காட்சி. இது ஐ. நா. துயருதவி நிறுவனத்தின் ஆறு அவசர முகாம்களில் மிகப் பெரியது. இதில் 40,000 பேர் வாழ்கின்றனர். கீழே வலப்புறம்: ஐ. நா. துயருதவி நிறுவனம் அளித்துள்ள முன்னிணைவு வீடுகள். கீழே: ஜோர்டானில் ட்ஜீனரிலுள்ள கூடார முகாம்.

Photo Bruno Barbey © Magnum, Paris



Photo Munir Nasr — UNRWA



Photo Gerard Wurtz © Paris Match

எல்லா அகதி குழந்தைகளும் 6முதல் 12 வயதுவரை 6 ஆண்டு கல்வி பெறுகின்றனர். நன்றாகப் படிப்பவர்கள் இன்னும் 3 ஆண்டுகள் முதல்நிலை நடுத்தரப்பள்ளிகளில் பயில்கின்றனர். அரசாங்க, தனியார் பள்ளிகளுக்கும் பணம் செலுத்தும் முறைப்படி 64,000 அகதி மாணவர்கள் மேல் உயர்நிலைக் கல்வி பெறுகின்றனர்.

அகதிகள் கல்வி பெற விழைகின்றனர். பல பள்ளிகளில் நெருக்கடி மிகுதியினால் மாற்று முறைப்படி வகுப்புகள் நடைபெறுகின்றன.

ஆயினும் பொதுக் கல்வி மட்டும் போதாது. 12 தனி நிலையங்களில் ஐ. நா. துயருதவி நிறுவனமும் யுனெஸ்கோவும் தொழில் கல்வியும் ஓரளவு வாழ்க்கைத் தொழில் கல்வியும் அளிக்கத் திட்டங்கள் அமைத்துள்ளன. பொதுவாக 2 ஆண்டு நீடிக்கும். இக்கல்வித் திட்டப்படி ஈயவேலை வரைதல், முடிதிருத்துதல், ஆய்வுக் கூட வேலை, கற்பித்தல் போன்ற பல அலுவல்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது.

சென்ற ஆண்டு காஸா பகுதியில் மட்டும் 7,000 மாணவர் உயர்நிலை இறுதித் தேர்வுக்கு அமர்ந்தது கல்வித் துறையில் நிகழும் பெரு முயற்சியைக் காட்டுகிறது. அப்பகுதி 1967இல் கைப்பற்றப்பட்ட பிறகு அங்கு இத்தகைய தேர்வு நடைபெறுவது இதுவே முதல் முறையாகும்.

இத் தேர்வு நடைபெறுவதற்காக யுனெஸ்கோ கெய்ரோவிலிருந்து விடைத்தாள்களைப் பெற்று அவற்றைத் திருத்தித் திருப்பி அனுப்ப பல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. தேர்வில் 5,000 மாணவருக்கு மேல் தேர்ச்சி பெற்றனர். அவர்களுள் 1,000 பேர் இவ்வாண்டு பிப்ரவரி, மார்ச் திங்கள்களில் செஞ்சிலுவை சங்க மேற்பார்வையில் 5 பிரிவுகளாக 200 மைல் பயணம் செய்து பல்கலைக் கழகங்களிலும் பிற உயர்தரக் கல்வி நிலையங்களிலும் பயில்வதற்காக கெய்ரோ சென்றனர்.

ஐ. நா. துயருதவி நிறுவனம், அரசாங்கங்கள், தனி நிறுவனங்கள், தனி மனிதர் தரும் நன்கொடைகளை நம்பி யிருப்பதனால் தேவைக் கேற்ப மிகுதியான நிதி பெற இயலவில்லை. அகதி மாணவர் தொகை விரைவாகப் பெருகி வருவதால், 1966–67 கல்வி ஆண்டிலிருந்து ஐ. நா. துயருதவி நிறுவன, யுனெஸ்கோ கல்வித் திட்டச் செலவு 50 இலட்சம் டாலர் கூடியிருக்கின்றது.

அகதிகளின் பிரச்சினை தீரும் வரை கல்வித் திட்டங்களும் பெருகவேண்டியிருக்கும். ஆனால் நிதிக் குறைவின் காரணமாக ஐ. நா. துயருதவி திட்டங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. நிறுவனத்தின் பணிகள் குறைக்கப்படும்போது, அகதி குழந்தைகளின் எதிர்காலம் மிகுதியாகப் பாதிக்கப்படும் அளவு கல்வியும் பயிற்சித் திட்டங்களும் பாதிக்கப்படும்.

ஐ. நா. துயருதவி நிறுவனப் பொது ஆணையாளர் திரு. லாரன்ஸ் மைக்கில் மோர் 1969இல் ஐ. நா. பொதுப் பேரவையில் கூறியது போல் "கல்வியும் பயிற்சியும் குறைக்கப்படுமானால் அகதிகளின் அறிவெல்லை இன்னும் குறுகி, அராபிய உலகு இன்று பெற்று வரும் தொழில் நுட்ப உதவியும் முற்றிலும் நின்றுவிடும்."

தமிழில்: வள்ளுவன் கிளாரன்சு



சித்தியர்களின் பொற்குவை

அலெக்ஸாண்டர்
கர்பிச்னிக்கோவ்

ரஷ்யரான அலெக்ஸாண்டர் கர்பிச்னிக்கோவ் ஒரு வரலாற்று அறிஞர். தொல்பொருளாய்வு, கலை வரலாறு ஆகியவை பற்றிய நூல்கள் பல எழுதி ரஷ்யாவில் புகழ் பெற்றவர்.

Photos C V, ChuPrynin, Arcehaeology Institute, Ukrainian Academy of Sciences, Kiev

1969இல் பேராசிரியர் ஏ. லெஸ்காவ் தலைமையில் சென்ற புதை பொருளாய்வுக் குழு தென் யுக்ரெய்னில் காக்கோவ்கா மாவட்டத்தில் கொள்ளைக்காரர்களால் சூறையாடப் படாத சித்திய கல்லறையொன்றை அகழ்ந்தாய்ந்தது. கி.மு. 5ஆம் நூற்றுண்டின் சித்தியக் கல்லறைகளுள் இதுவே வளமிக்கதாகும். மேலே: திண்ணிய பொன் முறுக்குப் பழக்கப்பட்டிகையின் ஒரு பகுதி. இன்று வரை அதன் இனுமல் வேலைப்பாடுகளின் வண்ணம் மாறவில்லை. கீழே: வீரனின் அம்புக் கூட்டை அலங்கரித்த நுண்ணிய வில்லைகளுள் மூன்று. இவற்றில் மான், காட்டுப் பன்றி, வேட்டைநாய் ஆகிய உருவங்களைக் காணலாம்.

மாஸ்கோவின் ஷெர்மட்டீவ் விமான நிலைய இயக்குநர் தமக்கு முன்னால் நின்று கொண்டிருந்த இரு இளைஞரை ஐயத்துடன் பார்த்தார். அவர்கள் பயணக் களைப்புடனும் உறக்க மிழந்த செங்கண்களுடனும் காணப்பட்டனர். தொல் பொருளாய்வாளர் வசிலி பிட்சில்யாவும் காவல்துறை அதிகாரி விலாடிமிர் காாஸ்டாவும் அவசரமாகவும் அதிகாரத்துடனும் தாம் இருவரும் உடனே, லெனின்கிராட் செல்ல வேண்டுமென வற்புறுத்தினர். அவர்கள் தமது கையிலிருந்த பழைய பெட்டியை ஒரு விநாடி கூட கீழே வைக்க மறுத்தனர்.

அப் பெட்டியினுள் பார்த்ததும் விமான நிலைய அதிகாரி உடனே இணங்கினார். சில நிமிடங்களில் அவ்விருவரும் தமது விலையுயர்ந்த பொருள்களுடன் விமானம் ஏறினர். மூன்று மணி நேரம் கழித்து அவர்கள் ஹெர்மிட்டேஜ் பொருட்காட்சி மனை இயக்குநர், டாக்டர் போரிஸ் பியட்ராவ்ஸ்கியின் முன்

தென் யுக்ரெய்னில் பால்கியின் அருகிலுள்ள "காய்மோனாவ்" கல்லறையை சூறையாடிய கள்வர்கள் பொன்னாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்ட இவ்வரிய கோப்பையையும் (கீழே: பின் அட்டையில் விரிவான தோற்றம்) வெள்ளிக் குடி கலத்தின் நுனியை அலங்கரித்த பொன் ஆட்டின் தலையையும் (மேலே) எடுக்காமல் விட்டுவிட்டனர். 1969இல் இளம் யுக்ரேனிய தொல் பொருளாய்வாளர் வசிலி பிட்சில்யா நீர்ப்பாசனத் திட்டத்தினால் அழிவுறும் போல் தோன்றிய கல்லறைகளை ஆயும்போது இவற்றைக் கண்டெடுத்தார். தொல்பொருளாய்வாளரின் கலைக் களஞ்சியமாக விளங்கும் இக் கோப்பையில் கி. மு. 4ஆம் நூற்றாண்டில் சிறந்த கைவினைஞர் ஒருவர் சித்திய வாழ்க்கை, உடை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை பொன்னிலும் வெள்ளியிலும் "எழுதி" யுள்ளார்.

Photos © APN

சித்தியர் வேலைப்பாட்டுக் கலையை மிகுதியாக விரும்பினர். அவர்கள் தமது கல்லறைகளில் கிரேக்க கலைப் பொருள்களைச் சேர்த்து வைத்தது வரலாற்றின் விளையாட்டாக இருக்கிறது. ராஸ்டாவ் பகுதியில் செர்டோம்லிக் கல்லறையில் கண்டெடுக்கப்பெற்ற இந்த பொன் தகடு (மேலே) கிரேக்க வீரன் அக்கில்லஸின் வாழ்க்கைக் காட்சிகளைக் காட்டுகிறது. இது சித்திய அம்புக் கூட்டை அலங்கரித்தது. வலப்புறம்: கிரேக்கருக்கும் சித்தியருக்கு மிடையே நிகழ்ந்த போரைக் காட்டும் வாளுறையின் பொன் முகப்பு.

வெள்ளி முகங்கள், பொன்னுடைகள்

தமது அரும் பொருட் குவையை அவிழ்த்தனர். பொன் விளிம்புள்ள குவளைகள், பொன் வெள்ளிக் கோப்பை, பொன்னும் வெள்ளியும் மிளிரும் இரு குடிகலங்கள், மூன்று வெள்ளிக் கலங்கள், நூற்றுக் கணக்கான சிறு தங்கவட்டுகள் ஆகியவற்றை அவர்கள் மேஜையில் வைத்ததும் இயக்குநர் வியப்பில் ஆழ்ந்தார்.

அஃது எதிர்பாரா வெற்றியின் நேரம். 1969இன் தொடக்கத்தில் இளம் தொல் பொருளாய்வாளர் வசிலி பிட்சில்யா சில இந்திய புதைகுழிகளைத் தோண்டுவதை மேற்பார்த்து வந்தார். அவை கிரிமியாத் தீபகற்பத்திற்கு 100 மைல் வடமேற்கில் கீழ் நீப்பர் நதியின் இடக்கரையிலுள்ள பால்கி எனும் யுக்ரேனிய கிராமத்திலிருந்தன. அவற்றிற்கு வட ரகாசிக் நீர்ப்பாசனத் திட்டத்தினால் ஆபத்து விளையும் போலிருந்ததால் வழக்கம் போல் அவற்றைத் தோண்டினர். அப்போது வசிலி பிட்சில்யா தமக்குப் புகழ் தரப்போகும் புதையலைக் கண்டுபிடிக்கப் போவதாகக் கனவிலும் கருதியிருக்க மாட்டார்.

''காய்மனுவ் கல்லறை'' என்றழைக்கப்படும் கல்லறையில் காணப்பட்ட பொருள்கள் பல, செர்டோம்விக், கோலலோகா, குல் ஓபா ஆகிய புகழ்மிகு சித்திய புதைகுழிகளில் காணப்பட்ட பொருள்களை ஒத்திருந்த போதிலும் தனித் தன்மையுடன் விளங்கின.

நாடோடிகளான சித்தியர் கருங்கடல் பகுதிகளிலும் நீப்பர், டான் நதிகளின் கீழ் பகுதிகளிலும் கிரிமியாவிலும் தமது அரசுகளை அமைத்தனர். அவர்கள் சிறந்த குதிரைவீரர்கள். கி. மு. 9ஆம் நூற்றாண்டு முதல் 3ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர். நாளடைவில் சார்மேஷியர்கள் அவர்களை வென்றனர்.

சோவியத் கலைஞர், போரிஸ் ரிபாகாவ் 'காய்மனுவ் கல்லறை' கண்டுபிடிக்கப்பட்டதை ''சித்தியப் பண்பாட்டை முழுவதும் ஆயத் தூண்டும் அரிய சாதனை'' என்கிறார்.

சித்திய வாழ்வின் படை, தூதாண்மைக் காட்சிகளைப் புடைப்பியல் வடிவில் காட்டும் பொன் வெள்ளிக் கோப்பைதான் கண்டெடுக்கப்பெற்ற பொருள்களில் மிகச் சிறந்தது எனலாம். அதில் ஒரு புறம் நீண்ட முடியும் தாடியுமுள்ள, அமர்ந்திருக்கும் இரு உருவங்கள் காணப்படுகின்றன. அவை வேலைப்பாடுள்ள நீண்ட சட்டையும் குறுகிய கால் சட்டையும் கணுக்கால்களில் தோல் வாரினால் இணைக்கப்பட்ட கூர்முனையுள்ள காலணிகளும் அணிந்துள்ளன. ஒரு சித்தியன் உடைவாள் தொங்கும் வார் அணிந்திருக்கிறான். அவனது கை, அதன் பேலிருக்கிறது. மற்றொருவன் அம்பு நிறைந்த கூடு வைத்திருக்கிறான். அவனருகில் வில்லும் வில்லுப் பெட்டியும் கிடக்கின்றன. ஒவ்வொருவனும் உயர்த்திய கையில் சாட்டை வைத்திருக்கிறான்.

கைகளையும் முகங்களையும் வெள்ளியினாலும் உடைகளைப் பொன்னினாலும் செய்துள்ளதால் அவற்றிற்கு ஒளியுமிழ் தோற்றத்தையும் உயிர்த் துடிப்பையும் கலைஞன் தந்திருக்கிறான். வழிபாடு செய்வதுபோல் அல்லது உறுதிமொழி கூறுவதுபோல் ஆழ்ந்த சிந்தனைத் தோற்றத்துடன் முகங்கள் காணப்படுகின்றன. கலையைப் பொறுத்தவரையில் இவை சித்தியக் கலைப் பொருள்களில் சிறந்தவை எனலாம். இக் கோப்பையைச் செய்த தலைசிறந்த கலைஞன் தோற்ற விவரங்களை விரிவாகச் சித்தரிக்கும் சிறந்த சிற்பியாக இருக்க வேண்டும்.

கோப்பையின் மறுபுறம் சிதைந்துள்ளது வருந்தத்தக்கது. ஆயினும் அதில் அமர்ந்திருக்கும் தாடியற்ற இரு உருவங்களைக் காணலாம். இருவரும் ஒருவரையொருவர் நோக்கி கைகளை நீட்டுகின்றனர். ஒருவரது முழங்காலில் கிண்ணம் ஒன்று இருக்கிறது. அவர்களுக்கு வலப்புறம் முழங்காலிலிருக்கும் ஒருவன் ஒரு கையால் தனது முகத்தை மூடி மறுகையால் அமர்ந்திருக்கும் தலைவனுக்கு ஏதோ கொடுக்கிறான். இடப்புறம் மதுவருந்தும் உருவம் காணப்படுகிறது.

தோற்றத்தில் உயர்நிலை மக்கள் போல் தோன்றும் இந்த ஆறு உருவங்களுள்ள இம் குடைப்பியல் ஓவியம் மறைந்து போன உலகின் எழில் தோற்றத்தையும் சித்தியரின் படைக் கலங்கள், உடைகள் போன்ற அரிய விவரங்களையும் காட்டுகின்றது.

வசிலி பிட்சில்யா தமது ஆய்வின் இறுதியில் கல்லறையொன்றை மூடியிருந்த மிகப் பெரிய செயற்கை மேட்டை ஆய்ந்தார். இதன் மேல் சில வேளை காவல் மாடமிருந்தது. இம் மேடு 30 அடி உயரமும் 250 அடி விட்டமுமுள்ளது. இதைச் சுற்றி 70 சிறிய மேடுகள் உள்ளன. இவற்றுள் சில ஏற்கெனவே திறக்கப்பட்டிருந்தன. சாப்போரோஸ் இரும்புச் சுரங்க வேலையாட்கள் பிட்சில்யாவின் மேற்பார்வையில் மேட்டைத் தோண்டினர். மேட்டின் தாழ்ந்த சுவர் சூழ்ந்த மேல் பகுதியின் மண்ணை அகற்ற அவர்களுக்கு 2 மாதங்களாயின.

மேட்டின் மேற்கு சரிவில் சவவிருந்தின் அடையாளங்கள் காணப்பட்டன. குதிரை, ஆடு இவற்றின் எலும்புகள், உடைந்த கலங்களின் துண்டுகள், கடிவாளங்கள், அம்பு முனைகள் கண்டெடுக்கப் பெற்றன. மேட்டின் அடிப்பக்கத்தில் 25 அடி ஆழத்திலுள்ள நிலவறைக்குச் செல்லும் இரு வழிகளிருந்தன. பல நூற்றாண்டுகளுக்கு முன் திருடர்கள் நுழைந்த வழியையும் அகழ்வாய்வாளர் அங்கு கண்டனர்.

நிலவறைக் கூடத்தின் சுவர்களை நுணுகி ஆய்ந்தபோது, கல் சவப் பெட்டியின் சலவை முகப்புத் துண்டுகளடங்கிய மாடம் ஒன்று காணப்பட்டது. சமையலறைப் பகுதியில் சமையல் கலங்கள், இறைச்சித் துண்டுகளை எடுக்கும் வெண்கல இடுக்கிகள், கொதிகலம், பானை, தட்டு, வட்டில், சிறு வாளி, மதுச் சல்லடை மட்கலங்கள், மது அகப்பை போன்ற பொருள்கள் காணப்பட்டன. சமையலறையின், வாசலின் குறுக்கே காவலனின் எலும்புக் கூடு கிடந்தது. அதனருகில் ஈட்டியும் வில்லும் அம்புகளும் கிடந்தன.

திருடர்கள் நுழைந்த போது இப் பகுதி, ஒரு பெண்ணின் கல்லறையில் விழுந்து கிடந்த மண்ணினால் மறைக்கப் பட்டிருந்திருக்கலாம்.

அங்கு அகழ்வாய்வாளர் ஒருவர் திடீரென மிருதுவான மண்ணுள்ள பகுதியைக் கண்டார். பொன்னொளியைக் கண்டதும் அவர்கள் விரைந்து தோண்டினர். திருடர் காணாத அப் புதையல் இறுதியில் கண்டுபிடிக்கப் பட்டது. மேலே விவரித்த கோப்பையும் அதிலிருந்தது. 24 நூற்றாண்டுகளாக புதைந்து கிடந்த அப்புதையலை அகமகிழ்ந்த ஆய்வாளர்கள் 18 மணி நேரம் சோதித்து, வகைப்படுத்தி, படமெடுத்தனர்.

காய்மனுவ் கல்லறையின் அகழ்வாய்வு இன்னும் முடியவில்லை. நடுக் கல்லறை உட்பட இன்னும் மூன்று கல்லறை மேடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னும் அவற்றில் ஆய்வு நடைபெற்று வருகின்றது.

இவை கண்டுபிடிக்கப் பெற்ற இடத்தில் பொருட்காட்சி மனை ஒன்று நிறுவப்படும். அங்கு மிகச் சிறந்த பொருள்களின் ஒத்த வடிவங்கள் காட்சிக்கு வைக்கப்படும். செயற்கை மேட்டின் மேலுள்ள மண்மேடு நீக்கப்பட்டு, அதைச் சுற்றியிருந்த பழைய கல் சுவர் திரும்ப எழுப்பப்படும். தட்டையான சமவெளியில் பிரமிட் போல் உயர்ந்து விளங்கும் இம் மேடு சித்திய வீரர் இறுதியில் கொள்ளும் இடத்தைக் குறித்துக் காட்டும். அவர்களது வழி வந்தோருக்கு இக்கல்லறை கடந்த கால மறை பொருள்களைக் காட்டும் பலகணியாகத் துலங்கும்.

தமிழில்: வள்ளுவன் கிளாரன்சு

இக்காலத்திற்கேற்ற பொருட்காட்சி மனைகள்

டங்கன் எஃப். காமரான்

நகரத்தில் வாழும் ஒரு குழந்தை, விடுமுறையின்போது முதன் முறையாக கிராமத்திற்குச் செல்லுகையில், கற்களையும் காளான்களையும் பட்டுப் பூச்சியையும், செத்த தேரையையும், இலைகளையும் மலர்களையும், சேகரிக்கும் போது, குழந்தையின் புதுமை மோகத்தின் அறிகுறி என்று அதை நாம் புறக்கணிக்கலாம். ஆனால் தான் சேகரித்த அச் செல்வங்களை அக் குழந்தை, ஒதுக்கமான இடம் ஒன்றுக்கு எடுத்துச் சென்று, அவற்றைப் பலவகையாக அடுக்கி, முறைப்படுத்துவதைக் கவனியுங்கள். அவன் பாடுபடுபட்டுச் சேகரித்துள்ள அரும்பொருட்களை, அவன் பெற்றோர் சிந்தியாமல் தூர எறியும்போது மட்டுமல்ல, நல்லெண்ணத்துடன் அவன் அன்னை, அலங்கோலமாக இருக்கும் பொருட்குவியலை ஒழுங்குபடுத்துவதாக எண்ணிக்கொண்டு, அவன் பாடுபட்டு உருவாக்கியிருந்த வடிவ அமைப்பையும் உறவையும் சீர்குலைக்கும் போதுகூட, அவனுக்கு ஏற்படுகிற உண்மையான உளவேதனையைப் பாருங்கள். அப் பொருட்களைச் சேகரிப்பதால் மட்டுமல்ல, அப் பொருட்களைக் கொண்டு, ஒரு புது அமைப்பை உருவாக்கும் முயற்சியின் மூலமாகவும், அவன் அறிவு விளக்கத்தை நாடுகின்றான்.

அதுபோலவே, கடந்து விட்ட காலத்தில் தங்கள் உறுதியான ஈடுபாட்டை நிலைநிறுத்த விழைந்து, வயோதிகர்கள், தாங்கள் குடியிருக்கும் வீடுகளில், பழைய நினைவுப் பொருட்களை, ஆழ்ந்த, அகலாத, பற்றுதலுடன், சேகரித்து, முறைப்படுத்தி வைப்பதைப் பாருங்கள். துடிக்கும் இளமைப் பருவத்தைப் பையனோ, பெண்ணோ, தன் சொந்த அறையில், கண்ட கண்ட பொருட்களையும் ஒழுங்கு முறையின்றி, வெளிப் பார்வைக்கு அலங்கோலமாகத் தோன்றும்படிச் சிதறியுள்ள காட்சியையும் இதே கண்ணோட்டத்துடன் பாருங்கள். அந்தப் பொருட்களை அவர்கள் பலமுறை மாற்றி மாற்றி முறைப்படுத்துவதைப் பாருங்கள். தங்கள் ஆளுமையை அறிந்து நிலைநாட்டவும் தங்களைச் சுற்றியுள்ள அமைப்பில், தங்களுக்கென இடம் தேடவும் நாட்டம் கொண்டு, தங்களை வருத்தும் குழப்ப நிலைக்குத் தீர்வு காண, தங்கள் தற்காலிக மனப்போக்குகளுக்கும் ஒத்துச் செல்லக்கூடிய, அவ்வப்போது மாறக் கூடிய, உருவக அமைப்பு ஒன்றை உருவாக்க, இளைஞர்கள் துடிப்பதைப் பாருங்கள். அரும்பொருட்களைச் சேகரிப்பதன் அடிப்படைக் குறிக்கோள் இது தான்.

அரும்பொருட்காட்சி மனை (மியூசியம்)க்கு, இன்று ஒரு முக்கிய சமூகப் பொறுப்பு உண்டு. பன்னெடுங் காலத்துக்கு முன்பு, முதல் சேகரிப்பாளன், தன்னைச் சுற்றியிருந்த அரும் பொருட்களைச் சேகரித்து, அவற்றை அடுக்கி, மாற்றி அமைத்து, பலப்பல வகையாக ஒழுங்குபடுத்தி, அதன் மூலம் தன் உலகைப் பற்றி அறிவு விளக்கம் பெற முயன்ற நாள் முதற்கொண்டு, இந்த சமூகப் பொறுப்பு அடிப்படையில் பொதிந்துள்ளது. அதாவது, அந்த சமூகப் பொறுப்பு, அன்று முதல் இன்றுவரை மாறாமல் இருந்துள்ளது. எதிரே காணும் சூழ்நிலையின் மெய்ம்மையிலிருந்து ஏதாவது ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து, அதன் சின்னங்களையும் சான்றுகளையும் சேகரித்து, அந்த மெய்ம்மையை உருவகப்படுத்திக் காட்சியில் நிலைநிறுத்த முயன்று, மனிதன் தன்னைச் சுற்றியிருந்த சூழ்நிலையுடன் அனுசரித்துச் செல்லக் கையாண்ட வழிகளில் ஒன்றாகும்.

முதலாவதாக, முன்பு வழங்கிவந்த, மரபு வழி வந்த அரும்பொருட்காட்சி மனையை நாம் இக் கண்ணோட்டத்துடன் ஆராய்வோம். இரண்டாவதாக, ஜனநாயக மரபுக்கேற்பவும், இன்றைய மக்களுக்கு மேலும் பொருத்தமாகவும் பயனுள்ள முறையிலும் திருத்தி அமைக்கவும், சென்ற இருபது ஆண்டுகளில், இந்த அரும் பொருட்காட்சி மனைகளில் செய்யப்பட்டுள்ள மாறுதல்களையும் முன்னேற்றங்களையும் காண்போம். இறுதியாக, வெளிப்பார்வைக்குப் பெரும் குழப்பமாகத் தோன்றும் அளவுக்கு, ஓயாது மாறிக் கொண்டிருக்கும் உலகில், நிலையான ஒரு தன்மையும் தெளிவும் பெறவும், தன் ஆளுமையில் பொதிந்துள்ள புதிய சக்திகளை வெளிப்படுத்தவும், ஒவ்வொரு மனிதனும் சோதனைகள் நடத்திச் சாதனைகள் காண, தனிப்பட்ட அமைப்பாகவும் பொது அரங்கமாகவும், அமையக் கூடிய முறையில் அரும்பொருட்காட்சி மனைகளை உருவாக்குவது பற்றியும் நாம் சிந்திப்போம்.

மரபுவழிவந்த அரும் பொருட்காட்சி மனை என்று சொல்லும்போது, 19வது நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20வது நூற்றாண்டின் முற்பகுதியிலும் இயங்கிய பொது அரும் பொருள் காட்சி மனைகளைக் குறிப்பிடுகின்றோம். இவை பல வழிகளில் தோன்றியிருக்கக் கூடும். பொது மக்கள் நலனுக்குப் பயன்படும் வகையில் அரும் பொருட் காட்சி மனைகள் தொடக்கத்திலிருந்தே உருவாக்கப்பட்டு அந் நலனுக்கு உகந்த முறையில் வளர்க்கப்பட்டது மிக அரிது. பெரும்பாலும், அது தனி ஒருவரின் சொந்தக் காட்சி மனையாகவே, தொடங்கியது. கலையார்வம் மிகுந்த அந்த ரசிகர், தம் ஈடுபாட்டிற்கு ஏற்ப அந்த மனையை அமைத்திருந்தார். அதைப் பொதுமக்கள் பார்க்கவும் அவர் அனுமதி வழங்கினார்.

அரும் பொருட் காட்சிமனை, தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான, வீடாய், சாதாரண வீடாகவோ மிகப் பெரிய மாளிகையாகவோ— இருந்திருக்கும். அதன் வரலாற்றுச் சிறப்பு, அதனுள் அடங்கிய பொருள்கள், முன்பு வாழ்ந்த பெரு மக்கள் ஆகியவற்றை முன்னிட்டோ, வீட்டுக்கு வேறு பயன் எதுவும் காண முடியாத காரணத்தாலோ, அது பொது மக்களுக்குத் திறந்து விடப்பட்டிருக்கலாம். ஆராய்ச்சிப் புலமை மிக்க ஒருவர், தம் ஆராய்ச்சியின் விளைவாகவோ, ஆய்வுப் பரிசோதனைகள் விளைவாகவோ, உருவாக்கிய அரும், பொருட் களஞ்சியமாக அது தொடங்கியிருக்கும். ஜனநாயக மரபு வழிப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள், மெருகற்ற முறையில் இருந்த போதிலும், ஒரு நூற்றாண்டுக்கு முன்பே தோன்றியிருந்த காரணத்தால், அவற்றிற்கு இணங்க, இந்த அரும் பொருட் களஞ்சியம் பொது மக்களுக்கும் திறந்து விடப்பட்டிருக்கும்.

பொது மக்களுக்குத் திறந்துவிடப்படுவதற்கு முன், அந்த அரும்பொருட்காட்சி மனை, தனிப்பட்ட முதலாளி ஒருவருக்கோ, பல்கலைக் கழகத்துக்கோ, திருச்சபைக்கோ அல்லது அரும் பொருட் காட்சி மனையை உருவாக்குவதிலோ, பொது மக்கள் எந்த வகையிலாவது பயன்படுத்தும் முறையில் அதைத் திருத்தி அமைப்பதிலோ சிறிதும் தொடர்பு கொள்ளாத ஒரு சங்கத்துக்கோ, சொந்தமானதாக இருந்தது. தனி ஒருவருக்கு அல்லது ஒரு சிலருக்குச் சொந்தமான அரும்பொருட் காட்சி மனையாக அது திறமையாக இயங்கியிருக்கலாம். ஆனால், புதிய பொதுப் பொறுப்பை நிறைவேற்றும் ஆற்றல்

டங்கன் எஃப். காமரான் கனடாவின் பெரும் தேசிய கலைச் சங்கமாகிய கனடா கலை மா நாட்டின் தேசிய இயக்குநரும் பன்னாட்டு பொருட்காட்சி மனைகளின் அவையின் பொது, தற்காலக் கலைப் பன்னாட்டுத் துணைக் குழுவின் இணைப்பு அலுவலரும் ஆவர். பொருட்காட்சியில் வல்லுநரும் பண்பாட்டு வள அறிவுரையாளருமான இவர் இத் துறைகள் பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார். இக்கட்டுரை "இக்கால பொருட்காட்சி மனைகள்" பற்றி அண்மையில் நிகழ்ந்த யுனெஸ்கோ பன்னாட்டுக் கருத்தரங்கில் இவர் நிகழ்த்திய உரையின் பிழிவு.

Photo © Mike Peters, Twickenham, U.K.

Photo Henri Cartier-Bresson © Magnum, Paris

கற்பிக்கும் வகையில் பொருள்களைக் காட்டும் மரபான பொருட் காட்சி மனைகளைப்போலல்லாமல், தற்கால "ஆக்கத்திறனுள்ள" பொருட்காட்சி மனைகள் பொருள்களுக்கும் அவற்றைப் பார்ப்பவருக்கும் நேர் தொடர்பை ஏற்படுத்தி அவர் அவற்றிற்கும் நமது அன்றாட வாழ்க்கைக்குமுள்ள தொடர்பை அறியத் தூண்டுகின்றன. குழந்தைகள் பொருள்களைத் தொட்டுப் பார்த்து புத்துணர்ச்சியும் ஆர்வமும் பெறுகின்றனர் (மேலே). பெரியவர்கள் பொருள்களைப் பார்ப்பதை விட விவரக் குறிப்புகளை வாசித்து செய்தி அறிந்து கொள்ளப் பழகிக் கொள்கின்றனர் (இடப்புறம்).

Photo Bruce Davidson © Magnum, Paris

பல்தொழில் வல்ல பாதுகாப்பாளர்

அதற்கில்லை. சொந்த, தனிப்பட்ட, அரும் பொருட் களஞ்சியம் ஒன்று கூடப் பொது அரும்பொருட் காட்சி மனையாக உண்மையில் மாறியதாக நமக்குத் தகவல் இல்லை. தனிப்பட்ட அரும்பொருட்சி மனைகளுக்குப் பொது மக்கள் அனுமதிக்கப் பட்டிருக்கலாம். இவை இரண்டுக்கும் இடையேயுள்ள வேறுபாடு மிக முக்கியமானது.

தனிப்பட்ட காட்சி மனைக்குப் பொது மக்கள் அனுமதிக்கப்படும் போது, பார்வையாளருக்கு உண்மையில் என்ன கூறப்படுகிறது என்றால் ''இது இன்னொருவர் திரட்டியுள்ள களஞ்சியம். மெய்ம்மையை அவர் கண்ட வண்ணம், அதை உருவகப் படுத்தியுள்ளார். அதை நீங்கள் பார்வையிடலாம்.'' ஆனால் அது பொது அரும் பொருட்காட்சி மனையாக இருந்தால், பார்வையாளருக்கு என்ற கூறப்படும் என்றால்,'' இது உங்கள் அரும் பொருட் காட்சி மனை. இது நீங்கள் சேகரித்துள்ள களஞ்சியம். இங்கு சித்திரிக்கப்பட்டுள்ள மெய்ம்மையும், உலகு பற்றி இங்கு அளிக்கப் பட்டுள்ள கண்ணோட்டமும், உங்களுக்குப் பொருள் உள்ளதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்''. பொது அரும் பொருட் காட்சி மனை என்று பெயர் தாங்கியுள்ள மரபுவழி வந்த காட்சி மனைகளில் சூழல், பெரும்பாலும், பார்வையாளருக்குத் தொடர்பற்றதாகவும், வேற்றுத் தன்மை உடையதாகவும்தான் அமைகிறது. அரும் பொருட் காட்சி மனையில் அவன் கண்ட பொருளையும் பொருத்தத்தையும் விட, அதிகப் பயனும் பொருளும், குழப்பம் நிறைந்த வெளியுலகிலேயே காண முடிகிறது என்ற நிலை அவருக்கு அடிக்கடி ஏற்பட்டுள்ளதல்லவா? அரும் பொருட் காட்சி மனையிலேயே உலாவும் உந்துதல் அவருக்கு ஏற்பட்டால் கூட, அன்றாட உலகைப் பற்றிய அறிவுத் தெளிவோ, விளக்கமோ, பயனான உணர்வோ உறவோ அங்கிருந்து பெறுமல், நாம் அளிக்கும் காட்சிப் பொருட்களைக் கொண்டு அவர் கற்பனை செய்து கொள்ளக் கூடிய மாய மந்திர உலகை உறுதிப்படுத்தக் கூடிய எண்ணங்களைத் தானே அவரால் பெற முடிகிறது.

அறிவு புகட்டும் மற்ற சாதனங்களை போலல்லாமல், அரும்பொருட் காட்சி மனை, முக்கியமாக உருவான உண்மைப் பொருட்களை நம்புகிறது. சொற்களையோ, உருவகச் சின்னங்களையோ, மாதிரிப் பொருட்களையோ அது நம்பவில்லை. பொருட்களே, பொருட்காட்சி மனை மொழியின் எழுவாய். பொருட்களிடையே உள்ள உறவுகள், அம் மொழியின் பயனிலைச் சொற்கள். பொருட்களின் சுற்று நிலையின் அம்சங்களான துணைச் சாதனங்கள்—அச்செழுத்து, விளக்கப் படம், ஒலி படக்காட்சி, வண்ணம், வடிவம் போன்றவை—இந்த மொழியின் உரிச் சொற்களும் வினைச் சொற்களும் ஆகும். ஆகவே, அரும் பொருட் காட்சி மனை ஒன்றை அமைப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் மிக இன்றியமையாததாகத் தேவைப்படுவோர், சேகரிக்கப்பட்டுள்ள அரும் பொருட்களைப் பற்றி நன்கு அறிந்த ஒருவரோ, ஒரு சிலரோ, அல்லது தேவையான பொருட்களைத் திரட்டும் வகையறிந்த ஒருவரோ, ஒரு சிலரோ ஆகும்.

இந்த நிபுணர்கள், அரும்பொருட் காப்பாளர்கள்தான், அரும் பொருட் காட்சி மனை அமைப்பின் அச்சாணி போன்றவர்கள். அவர்களும் அவர்களுடைய நிபுணத்துவம் இல்லாமல், சேகரிக்கப்பட்ட அரும் பொருட்களை அவை உருவகப்படுத்தும் மெய்ம்மையுடன் பொருத்தி இணைத்து, அறிவு விளக்கச் சாதனங்களாக அமைக்க வேண்டுமென்ற குறிக்கோளை நாம் எய்த இயலாது. காட்சி மனையில் ஒரு பொருள், தானே முழு விளக்கமும் அளித்து உண்மையை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட வேண்டுமென்றால், அதற்கு வழி செய்வது, அரும்பொருட் காட்சி மனைக் காப்பாளரின் அறிவு, ஆய்வுத் திறன், ஆழ்ந்த அகத் தெளிவு ஆகியவையே.

ஆய்வுப் பொருட்களைத் திரட்டாமலும், அடிப்படை ஆராய்ச்சி நடத்த

விரல் நுனிகளால் கண்டறிதல்

"தொடக் கூடாது" என்ற பொருள்களையும் காட்சிப் பெட்டிகளிலுள்ள பொருள்களையும் பார்ப்பது குழந்தைகளுக்கு வெறுப்பளிக்கின்றது. அவர்கள் அவற்றைத் தொட்டு பல கோணங்களிலிருந்து ஆய வேண்டும் (இடப்புறம்). இவ்வாய்ப்பளிக்கும் பொருட் காட்சி மனைகளில் பொருள்களைத் தொட்டு விளையாடுவது குழந்தைகளுக்கு கிளர்ச்சி யூட்டுவதுடன் "புதிதாகக் கண்டறிந்து கற்கும்" அனுபவமாகவும் இருக்கின்றது. (வலப்புறம்), சிற்பத்தில் ஒரு புதிய தோற்றத்தைக் காட்டுகல்-அலெக்ஸாண்டர் கால்டர் பெயர்ச்சிக் கருவி.

Photo Musee des Beaux-Arts, Marseille © Atelier de RePrographie

வசதிகள் இல்லாமலும், அமைக்கப் பட்டுள்ள, இருபதாம் நூற்ருண்டு அரும் பொருட் காட்சிமனை அல்லாத நிலையங்களான, வெறும் கண்காட்சி, செயல்முறை விளக்க நிலையங்கள், ஆகியவை வேண்டுமானுல், அரும் பொருட் காப்பாளரின் திறமையை நம்பாமல் நடக்கலாம். ஆனுல் இந்த நிலையங்களும், அரும் பொருட்களைச் சேகரித்து ஆய்வு செய்து ஆய்வறிக்கைகளை வெளியிட்டுக் காப்பாளரின் நிபுணத்துவத்தையும் பயன்படுத்தும் அரும் பொருட் மனைகளை முறைமுகமாக நம்பி யிருக்கின்றன என்பதால், இவற்றைப் புல்லுருவிகளுக்கு ஒப்பிடலாம். அரும்பொருள் மனைகள் அல்லாத இந்தப் புது நிலையங்களைப் பின்னர் கவனிப்போம். இப்பொழுது காப்பாளரின் சேவை இன்றியமையாததாக இருப்பதால், இத் தேவை, அரும் பொருள் மனைகளின் அமைப்பிலும் நிர்வாகத்திலும் எவ்வாறு எதிரொலிக்கின்றது என்பதைக் காண்போம்.

காப்பாளர் தான் இந்த மனைகளின் அதிகாரியாக இயங்குவதாலும், பெரும்பாலும் அவரைத் தவிர, அவருக்கு உதவியாக வேறு பணியாளர்கள் இல்லை என்பதாலும், பொருட்களைச் சேகரித்து, ஆய்வு செய்து, அவற்றுக்கு விளக்கம் கூறும் பொறுப்பும் காப்பாளரையே சார்ந்ததாயிற்று. கண்காட்சியை அமைப்பது, கண்காட்சி நிகழ்ச்சி நிரலை நிர்ணயிப்பது, பொருட்களுக்கு விளக்கக் குறிப்புகளையும், மற்ற துணைச் சாதனக் குறிப்புகளையும் தயாரிப்பது போன்றவை அனைத்தும், காப்பாளரின் பொறுப்புக்களாயின. பொது மக்கள் பார்வையிட பொருட்களைத் தேர்ந்தெடுத்துக் காட்சி அமைத்ததும், காட்சியைச் சுற்றிப் பார்வையாளரை அழைத்துச் சென்று அவர்களுக்கு விளக்க உரை நிகழ்த்தியதும் காப்பளர்தான். வேறு யார்? வேறு யாருக்கு அந்த அதிகாரம் இருக்கமுடியும்?

இந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றும் ஆற்றல் காப்பாளருக்கு இருந்தது உண்மைதான். ஆனுல் முதலாவதாகவும் முக்கியமானதாகவும், அவர் அறிஞர். காட்சி அமைப்பு, குறிப்பு விளக்கம், அறிவு புகட்டுதல் ஆகிய பொறுப்புக்கள் அந்த அறிஞர் மேல் சுமத்தப்பட்டன. பெரும்பாலும், இப் பொறுப்புகளை ஏற்க அவருக்குப் பயிற்சியோ, பக்குவமோ, கிடையாது, அவருக்கு நன்கு தெரிந்த, அறிஞர்க்குரிய பயிற்சி, பண்பு, இலக்கணம் ஆகியவற்றை நம்பியே, அவர் அப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியிருந்தது. அறிவுப் பாகுபாட்டில் பத்தொன்பதாவது நூற்ருண்டில் பின்பற்றப்பட்ட முறையின் விரிவான, முப் பரிமாண, வெளிப்பாடுகளாகக் காட்சிக் கூடங்கள் அமைந்தன. காட்சிப் பொருட்களை விளக்குகையில் பார்வையாளரின் அனுபவத்தோடு, அல்லது அவருடைய பண்பியல்புகளோடு, பொருத்தி, விளக்கம் கூறப்படவில்லை. அறிவை முறைப்படுத்துவதில் அக் காலத்திய அறிஞர்கள் தங்கள் புலமைக்கும், ஈடுபாட்டிற்கும் ஏற்ற சில வழிமுறைகளில் உறுதியாக ஊன்றியிருந்தனர். அவற்றுக்குக் கட்டுப்பட்டே, காட்சிப் பொருட்களுக்கு விளக்கம் கூறப்பட்டது.

தமக்குப் பயிற்சியோ பக்குவமோ இல்லாத பொறுப்புகளும் தம்மிடம் ஒப்படைக்க்கப்பட வேண்டுமென்று காப்பாளர் கேட்கவில்லை என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். காப்பாளர் அனைவரும், பொதுப் பார்வையாளருடன் தொடர்பு கொண்டு அவர்களைக் கவர விரும்பவில்லை என்று கூறுவதும் சரியாகாது. கவர்வது எப்படி என்பது அவர்களுக்குத் தெரியவில்லை என்பதுதான் உண்மை. கண்காட்சி, அமைப்பு, கண்காட்சி சாதனம் மூலம் கல்வி, மற்ற பொருட்காட்சிக் கலைத் தேர்ச்சிகள், இன்று வழக்கில் நிலைபெற்று விட்டன. ஆனுல் நம் விவாதத்திற்குரிய காலத்தின் முதல் நூற்ருண்டில், அக்கலைகள் வழங்கவில்லை, அல்லது ஏற்றுக் கொள்ளப் படவில்லை என்பதையும் நாம் உணர வேண்டும்.

சிறப்பான தேர்ச்சி பெற்ற அரும் பொருட்காட்சிமனைக் காப்பாளரின் தொண்டையும், நிர்வாகத்தில் அதன் விளைவையும் விவாதிக்கையில் நாம் ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். ஒழுங்குமுறை இயல், அறிவைப் பாகுபாடு செய்து கிரமப்படுத்துதல், காப்பாளரின் தொண்டை முப்பரிமாணம் கொண்ட பாட புத்தகமாகக் கருதுதல் ஆகியவை, இயற்கை இயல் வரலாறு, அல்லது விஞ்ஞானம், அல்லது நுட்பத் தொழில் ஆகியவற்றில் மட்டும் ஈடுபட்ட அரும்பொருட் காட்சி மனைகளுக்கு மட்டும் பொருந்துவன அல்ல.

வரலாற்றுக் காட்சிமனை, இன்றையக் கலை உள்படக் கலைக்காட்சி மனை ஆகியவையும், மற்ற அரும்

படைப்பாற்றலையும் தன்னறிவையும் தூண்டும் பொருட்காட்சி மனை

பொருட் காட்சி மனைகளைப் போலவே, சில குறைகளுக்கு ஆளாகியுள்ளன. மற்ற அரும்பொருட்காட்சி மனைகளில் போலவே, இவற்றிலும், தனிப்பட்ட விளக்கக் குறிப்புகள் கையாளப்படுகின்றன. கலைப் பொருட்களைத் தேர்ந்தெடுப்பதிலும் அவற்றைக் காட்சியில் அமைப்பதிலும், கையாளப்படுகின்ற முறைகள், வரலாற்றுச் சிறப்புடைய பொருள்கள் எவை என்று தேர்ந்தெடுப்பதில் கையாளப்படும் முறைகள் ஆகியவை, விஞ்ஞானக் கண்காட்சியில் இருந்ததைக் காட்டிலும் பார்வையாளருக்குப் புதிராகவும் சிக்கல்களாகவும் தோன்றக் கூடியவை.

இந்நிலை நீடித்துள்ளதற்குக் காரணங்கள், பொதுமக்கள் இதைக் கண்டிக்கத் தயங்குகின்றனர் என்பதும், அரும்பொருட்காட்சி மனைகளின் நிர்வாகக் குழுக்கள் இந்நிலைக்கு ஆதரவு காட்டுகின்றனர் என்பதுமாகும். காப்பாளர்க்குரிய நுட்பத்திறன் பற்றி இரு சாராருமே சற்று அச்சம் கொண்டுள்ளனர். அரும்பொருட்காட்சி மனையின் உள்ளடக்கம் பொருளற்றது, தனி மனிதனின் அறிவு விளக்கத்துக்குத் தொடர்பற்றது, என்பதை ஒத்துக் கொள்ள இருசாரார்ருமே தயங்குகின்றனர். ஆகவே, அரும்பொருட்காட்சி மனை, மாயக் கற்பனை விளையாடும் அரங்கம் என்றும், மெய்ம்மை நிலையிலிருந்து தப்பித் தஞ்சம் புக வாய்ப்பளிக்கும் கற்பனை உலகம் என்றும் தான், பெரும்பாலோர் கருதுகின்றனர்.

இன்னும் மிகப்பெரும்பாலோர்க்கு, சிறிய அனுபவத்திற்குப் பின்பு, விளங்காததற்கு விளக்கம் காண முயல்வதால் ஏற்படும் கவலையும் வேதனையும் குடிகொள்ளும் அதன் மூலம் மந்தண விளக்க முறைகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றலை ஓரளவு பெற்றுள்ள உயர் நடுத்தர வர்க்கத்தினர் ஒரு சிலருக்குத் தங்கள் உயர்நிலை, உயர்ந்த அந்தஸ்து ஆகியவற்றின் அறிகுறியாக இது அமைகிறது. சமூகத்தில் இச் சிறுபான்மையினர் தான், இதுவரையிலுமாவது, மேலே விவரித்த, மரபு வழி வந்த அரும் பொருட் காட்சிமனைக்கு ஆதரவளிக்க முற்பட்டு வந்தனர்.

சென்ற இருபது ஆண்டுகளில், கலாச்சார வளங்களை ஜனநாயக மயமாக்குவதில் புதிய மனநிலைகளும் புதிய சக்திகளும் தோன்றிப் பல மாறுதல்களை உருவாக்கியுள்ளன. ஆனால், சமூகத்தில் அரும் பொருட்காட்சி மனையின் பங்கு பற்றி விவாதிக்கக் கருத்தரங்குகள் இன்னும் நடைபெற்று வருவதால், அண்மையில் சில காலமாக ஏற்பட்டுள்ள மாறுதல்கள் போதுமான அளவில் இல்லை என்பது புலனாகிறது.

அரும்பொருட்காட்சி மனைச் சீர்திருத்த இயக்கத்தில் சென்ற இருபது ஆண்டுகளாக ஓர் அடிப்படைக் கருத்து மேலோங்கியுள்ளது என்றால், அது, இம் மனைகள் தேவை என்பதை மற்றவர்கள் உணர வேண்டும் என்பதும், பயனுள்ளவையாக அமைய வேண்டும் என்பதுமாகும். இதையொட்டிப் பல போக்குகள் தெளிவாகியுள்ளன:

■ சமூகத்தில் அரும்பொருட் காட்சி மனையின் பங்கை நாடி, வெளிப்படையாகவும், இலட்சிய நிபந்தனை எதுவுமின்றியும் நாடும் போக்கு.

■ பொதுக் கல்வி முறையின் இணைந்த ஓர் அம்சமாக, அரும்பொருட்காட்சி மனையைக் கருதி, அதற்கு நிதி ஒதுக்கி, அதைப் பயன்படுத்தும் நிலை இன்னும் உருவாகவில்லை என்ற போக்கு.

■ அரும்பொருட் காட்சி மனையின் அடிப்படைத் திட்டங்களாக இல்லாத போதிலும், அவற்றோடு ஒட்டிப் பொதுமக்களுக்குப் பயன்படும் துணைத் திட்டங்களை உருவாக்கும் போக்கு.

■ பொருள்களைச் சேகரித்தல், இனம் கண்டு கொள்ளல், பாதுகாத்தல், அடிப்படை ஆய்வு, ஆய்வு அறிக்கைகள் வெளியிடுதல் போன்ற மரபு வழி வந்த அரும்பொருட்காட்சி மனைகளின், மனைக் காப்பாளரின், பொறுப்புக்களைச் செயலாற்றுவதைவிட, பொதுக் காட்சி, காட்சிப் பொருட்களல்லாத மற்ற சாதனங்களை முக்கியமாகக் கொண்டு, விளக்கம் கூறுவது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் போக்கு.

■ இப்போதுள்ள அரும்பொருட் காட்சி மனை அமைப்புக்கு உட்பட்ட போதிலும், தனியான, உட்பொருள் அமைப்பில் வேறுபட்டதான, அமைப்பாகக் குழந்தைகள் காட்சிமனைகளை உருவாக்கும் போக்கு.

■ கண்பார்வை இழந்தோர், ஊனமுற்றோர், ஏழைகள், அடக்கி ஒடுக்கப்பட்டவர் ஆகியோருக்கும், ‘கலாசார வாய்ப்பற்ற சிறுபான்மையினர்’, என்று அடிக்கடி கூறப்படுவோர்க்கும், தனியான அரும்பொருட்காட்சி மனைகளை வளர்க்கும் போக்கு.

இப்போக்குகள் அனைத்தும் இன்று காணப்படுகின்றன. ‘அரும்பொருட் காட்சிமனைப் புரட்சி’, என்று இது தவறாக அழைக்கப்படுகிறது. அதே சமயத்தில், அரும்பொருட்காட்சி மனை உலகுக்கு உள்ளும் வெளியிலும், பிற்போக்கு இயக்கங்களும், இக்காட்சி மனைகளை அதிகப்படுத்தவும் தாங்கள் இவற்றை பயன்படுத்த அதிக வாய்ப்புகள் வேண்டுமென்று பொது மக்களிடமிருந்து நாளுக்கு நாள் வலுத்து வரும் கோரிக்கையும் காணப்படுகின்றன. அரும்பொருட் காட்சி மனைகளை ஜனநாயக மயமாக்க வேண்டுமென்று, பொதுமக்களும் அரசாங்கமும் வற்புறுத்தி வருகின்றனர். ஆகவே நிலைமை மொத்தத்தில் தெளிவாக இல்லை என்றே கூறவேண்டும்.

இந்தச் சீர்திருத்தங்கள் நல்ல எண்ணத்துடனேயே செய்யப்பட்டுள்ளன. ஆயினும் பொதுமக்களிடையே இன்று வெளிப்படையாக ஏற்பட்டுள்ள தாகத்தின் தன்மையைத் தெளிவாக உணராமலும், இந்தத் தாகத்தை நிறைவு செய்ய இதுவரை செய்யப்பட்டுள்ள முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளன என்பதை உணராமலும், இச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அரும் பொருட்காட்சி மனையின் சமூகப் பங்கையும் பெறுப்பையும் உணர, வெளிப்படையாகவும், இலட்சிய நிபந்தனை எதுவுமின்றியும், முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்ற தேவை நீண்ட காலமாகவே நிறைவு செய்யப்படாமல் இருக்கின்றது.

அரும்பொருட்காட்சிமனை, அதிகார பூர்வமான கல்வி முறையின் இணைந்த அம்சமாக இருக்க வேண்டுமென்ற வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்பது என் கருத்து. விளையாட்டுத் திடல், இசை அரங்கம், நாடக மேடை, பொது நந்தவனங்கள் ஆகியவை போலவே, அரும்பொருட் காட்சிமனையும், மற்றவர்களுடன் அவ் வசதிகளைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிக்க முடியுமென்ற போதிலும், தனிப்பட்ட, சொந்த, அனுபவத்திற்குரிய, தனிச் சொந்த சூழ்நிலை அமைப்பாகவே இருக்க வேண்டும்.

1940-60 ஆண்டுகளில், நம் சமூகத்தில் கல்வி முறை நிலைபெற்று, ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பொது மக்கள் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் விலக்காய் இயங்கி வருகிறது. இந்த நிலைதான், கல்வி அமைப்புடன் அரும் பொருட் காட்சி மனையை இணைக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு இடமளித்துள்ளது என்று நான் எண்ணுகிறேன். நிலைபெற்ற கல்வி அமைப்புடன், அரும் பொருட் கட்சி மனை இணைந்து விட்டால், அதற்கு நிதி வசதியும், செல்வாக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, ஐயத்துக்கு இடமின்றிச் சமூகத்திற்குப் பயன்படும் நிலையும் கிட்டும். இந்தக் கவர்ச்சியினால் தான் இக் கோரிக்கை எழுந்ததென்று கருதுகிறேன்.

இந்த வாதத்தில் உள்ள குறை, அரும்பொருட் காட்சி மனைகள் கல்வி அமைப்புகள் அல்ல என்பதல்ல. கல்விக் குறிக்கோள்களை எய்த அருட் பொருட் காட்சி மனை கையாளும் வழி முறைகள், மரபு வழி வந்த கல்வி முறைக்குப் புறம்பானவை என்பது தான் உண்மையான நிலை. கல்வியில் அண்மையில் காணப்படும் புதுமைகளும் ஆராய்ச்சிகளும் இவை இரண்டும் ஒன்றோடொன்று நெருங்கி வர உதவக் கூடும். ஆனால் ஆதாரமும் முறையும் இன்றி, இதுகாறும் ஏற்பட்டுள்ள உறவுகளும் உடன்பாடுகளும் நியாயமானவை என்று அதைக் கொண்டு கூறமுடியாது.

அரும்பொருட் காட்சி மனைகளின் அடிப்படைத் திட்டங்களுக்குள் அடங்காத, துணைத் திட்டங்களை இக் காட்சி மனைகள் மேற்கொண்டுள்ள போக்கு புதிதானதல்ல. சில வேளைகளில் கழகங்களும் பழகுமுறை சங்கங்களும் அரும் பொருட்காட்சி மனைகளால் தோற்றுவிக்கப்படுவதற்குப் பதிலாக, அவையே காட்சிமனைகள் தோன்றுவதற்கு மூலகாரணமாக அமைந்தன. கலைக்காட்சி மனைகளோடு ஒட்டிய அமைப்புகளாக, கலைப்பள்ளிகள் நீண்ட காலமாகவே இயங்கி வந்துள்ளன.

ஆயினும் 1950–60 இடையேயுள்ள ஆண்டுகளில் இக் காட்சி மனைகள், துணை நடவடிக்கைகள் பலவற்றைப் பெரிதும் வளர்த்துள்ளன. சில அரும் பொருட்காட்சி மனைகள், தங்கள் அடிப்படைக் குறிக்கோளை மாற்றிக் கொள்ளாமல், கீழே குறிப்பிட்டுள்ள,

(தொடர்ச்சி 32 ஆம் பக்கம் பார்க்க)



முகமூடி மறைக்கும் உலகை ஆய்தல்

அண்மையில் பாரிஸில் மனித பொருட்காட்சி மனையில் நிகழ்ந்த ஆப்பிரிக்க கலை பற்றிய காட்சியில் வைக்கபட்டிருந்த 200 பொருள்களுள் கற்பனைத் திறன் மிக்க இம்மூன்று முகமூடிகளும் இருந்தன. ஆனால் ஆப்பிரிக்க கலைஞர்கள் அவற்றைச் செய்யவில்லை. இக்காட்சி, மார்சேல்ஸிலுள்ள காண்டினி பொருட்காட்சி தென் கிழக்கு பிரான்ஸிலுள்ள பல பள்ளிகளுடன் சேர்ந்து நடத்திய கல்வி ஆய்வின் மாபெரும் வெற்றியைக் காட்டியது. இந்த பிரெஞ்சு பொருட்காட்சி மனையிலுள்ள தற்கால கலைப் பொருள்களையும் தற்காலிக பொருட் காட்சிகளையும் 5 முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகள் ஆய்வுக்காகப் பயன் படுத்துகின்றனர். இவ்வாண்டு குழந்தைகள் ஆப்பிரிக்காவைப் பற்றிப் படித்ததுடன் ஆப்பிரிக்க கலைப் பொருட்காட்சியையும் பார்த்ததனால் தனிப்பட்ட முறையில் எவ்வளவு அறிவு வளர்ச்சி பெற்றார்கள் என்பது தெரிகின்றது. அவர்கள் பல பொருள்களைப் பயன் படுத்தி ஆப்பிரிக்க கலை பற்றித் தாம் நினைத்ததைத் தெரிவிக்கும் பொருள்களைச் செய்தனர். எடுத்துக் காட்டாக 15,16 வயது பிள்ளைகள் ஆணிகளையும் சல்லடையையும் (இடப்புறம்), வைக்கோலையும் குமிழ்களையும் தோலையும் (கீழே), தாள் சுருள்களைம் (கீழே இடப்புறம்) பயன்படுத்தி இம் முகமூடிகளைச் செய்தனர். இதிலிருந்து எவ்வாறு பொருட்காட்சி மனைகள் கருத்துப் பரிமாற்றத்திற்கும் கல்வி, சமுதாய நடவடிக்கைகளுக்கும் வழி வகுக்கக் கூடுமெனத் தெரிகின்றது. மேலும் பொருட்காட்சி மனையிலுள்ள கலைப் பொருளின் எழில் இக்கால குழந்தைகளையும், வேறொரு காலத்தையும் பண்பாட்டையும் சேர்ந்தவர்களையும் இணைக்க முடியு மென்பதையும் இது காட்டுகிறது.





Photos courtesy Daniele Giraudy, curator Musees des Beaux-Arts, Marseille C Atelier de

Photos © Maurice Broomfield, London

ஐக்கிய உலகக் கல்லூரிகள்

பன்னாட்டுக் கல்வியில் புதியதொரு கருத்து

டார் சைல்ட்

"உலக மனிதன்" எனத்தக்கவன் என்றேனும் தோன்றுவானா? அல்லது "உலகப் பெண்" எனத் தக்கவள் என்றேனும் தோன்றுவாளா? இனம், நாடு ஆகிய எல்லைகளைக் கடந்த பரந்த மனம் படைத்தவன் தோன்றுவானா? "வெளி நாட்டவன்", "வேற்று மனிதன்" என்னும் சொற்களை, வெறுப்புக் கலப்பின்றி காணும் மனிதன் உருப் பெறுவானா? தான் பெற்ற பன்னாட்டுக் கல்வியைக் கொண்டு அனைவரையும் மதிக்கும் பண்பாளன் என்றாவது தோன்றுவானா? —இவை பன்னாட்டுக் கல்வியாண்டில் கேட்கத் தக்க கேள்விகளேயாம்.

இக்கேள்விகளுக்கு பன்னாட்டுக் கல்வித் துறையில் மேற்கொள்ளப் பட்ட புதிய பெரு முயற்சியான ஐக்கிய உலகக் கல்லூரிகளில் விடை காண முடியும். இவ்வாறான முதற் கல்லூரி 1962இல் வேல்ஸிலுள்ள செயின்ட் டொனாட் காஸிலில், தொடங்கப்பட்டது. இலண்டனில் உள்ள இவ்வியக்கத்தின் தலைமையகத்துக்கும், வேல்ஸிலுள்ள கல்லூரிக்கும் நான் நேரில் சென்று பார்த்தேன்.

இலண்டனில் இவ்வியக்கத்தின் முதல் நெறியாளரான ராபர்ட் பிளாக் பர்ன் என்னும் அயர்லாந்து நாட்டவர் எனக்கு இவ்வியக்கத்தின் கொள்கைகளை விளக்கினார். ஐக்கிய உலகக் கல்லூரிகளின் பன்னாட்டு அவையின் தலைவரான மௌன்ட் பாட்டன் பிரபுவுக்குத் துணையாக தலைமைச் செயலதிகாரியாக, இவர் இப்போது பணியாற்றி வருகிறார். அட்லாண்டிக் ஐக்கிய உலகக் கல்லூரியே முதல் கல்லூரி எனக் குறிப்பிட்ட ராபர்ட் பிளாக் பர்ன் இதன் குறிக்கோளையும் விளக்கினார்: பன்னாட்டுக் கல்வி இனியும் பொருட் செலவு மிக்க ஆடம்பர மன்று. மனித குலம் அழியாமல் பாதுகாக்கப்பட இன்றியமையாத பொதுக் கல்வியே இது.

கல்வி நாடுகளை ஒன்று படுத்தும் சக்தி, பிரிக்கு சக்தி அல்ல. மக்களைப் பிரிக்கும் தடைகளைத் தகர்த்து புது முறைப் பன்னாட்டுக் கல்வியை உருவாக்க வேண்டுமென்று இது பாடுபடுகிறது.

ஐரோப்பாவிலும் மற்ற கண்டங்களிலும் பல பன்னாட்டுக் கல்லூரிகளை அமைத்து அவற்றில் உயர் நிலைப்பள்ளி இறுதி இரு ஆண்டுக் கல்வி இளைஞர்களுக்கு அளிப்பதே திட்டம். இப்பள்ளிகளில் மாணவர்கள் சேர்ந்து வாழ்ந்தும் படித்தும் பன்னாட்டுச் சமுதாயத்தில் பற்று வளர்ந்து அதன் சிறப்புக்கு உழைக்கும் பெரு நோக்கு எய்துவர் என்று அமைப்பாளர்கள் நம்புகின்றனர். இதனால் மாணவர்கள் தம் தாய் நாட்டுக்குத் திரும்பும் போது, நாடுகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளை அறிந்தும் அதே நேரத்தில் பன்னாட்டுப் பிரச்சினைகளை வன்முறை தவிர்த்து அறிவான முறை

டார் சைல்ட் நார்வேயைச் சேர்ந்த எழுத்தாளரும் பத்திரிகையாளருமாவார். இவர் ஆஸ்லோவில் வெளியாகும் "வெர்டன்ஸ் காங்" எனும் தினத்தாளின் அயல் நாட்டு ஆசிரியர்.

செயின்ட் டானட் கோட்டை எனப்படும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வேல்ஸ் கோட்டை பன்னாட்டுக் கல்வியில் புது முயற்சியாகிய அட்லாண்டிக் கல்லூரியின் சூழலாக அமைந்துள்ளது. உலகின் பல பகுதிகளில் அமைக்கப்படவிருக்கும் ஐக்கிய உலக கல்லூரிகள் எனப்படும் பன்னாட்டுக் கல்விக் கூடங்களில் இதுவே முதலாவதாகும். அட்லாண்டிக் கல்லூரி 36 நாடுகளிலிருந்து வரும் 15 முதல் 19 வயது வரையுள்ள 300 மாணவ, மாணவியருக்கு இது இறுதியாண்டு உயர் நிலைக் கல்வி அளிக்கின்றது. இத்திட்டம் பன்னாட்டுக் கல்வி, கூட்டுறவு ஆகியவற்றிற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. வலப்புறம்: நன்கு புதுப்பிக்கப் பெற்றுள்ள செயின்ட் டானட்டின் விருந்து மண்டபத்தில் உணவு வேளை. இது போன்ற ஐக்கிய உலக கல்லூரிகள் ஜெர்மானிய கூட்டாட்சி குடியரசிலும், கனடாவிலும், சிங்கப்பூரிலும் விரைவில் நிறுவப்படும்.

யில் பேசித் தீர்க்க வேண்டும் என்றும் பாடுபடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது அடைவதற்கரிய கொள்கையாக தோன்றினாலும் ஒன்று நிச்சயம். இங்கு பயின்று திரும்புவோரிடையே இக்கல்லூரியின் சிந்தனைச் செல்வாக்கு நீண்டகாலம் நிலைக்கும் என்று நம்பலாம். இந்த நூற்றாண்டு முடிவதற்குள் துவக்கப்பட உள்ள 6 கல்லூரிகள் குறிப்பிடத்தக்க சாதனை புரியும் என்பதில் ஐயமில்லை. கல்லூரி புதுமுக வகுப்பிற்கு முந்தைய நிலையில் பன்னாட்டுக் கல்விக்கான அவசியம் நடைமுறையில் தோன்றியுள்ளது. பல நாடுகளுடன் தொடர்புடைய வணிகரின் தொகை பெருகிவருகிறது. நாளுக்கு நாள் அதிக அளவில் அரசு அலுவலரும், தூதுவரும் தம் குடும்பங்களுடன் உலகில் இங்குமங்கும் சென்று தங்குகிறார்கள். இவர்கள் தம் மக்களுக்குக் கல்வி யளிப்பதில் பலவகையிலும் இடர்ப்படுகிறார்கள். இவர்கள் தாம் தங்கியுள்ள நாடுகளில் உயர் நிலைப் பள்ளிக் கல்வி பெற்றாலும், பல்கலைக் கழக கல்வியைத் தம் தாய் நாட்டிலேயே பெற விரும்புகிறார்கள். தற்போது பலநாடுகளிலும் உள்ள கல்வி முறைகளால் இந்தத் தேவையை ஈடுகட்ட முடியாது.

மேலும் பன்னாட்டு நிறுவனங்களும் வாணிகமும் உண்மையிலேயே பன்னாட்டு மனப்பான்மையும் பயிற்சியும் கொண்ட ஊழியர்களைப் பெறுவதில் மிகவும் தொல்லைப் படுகின்றன.

முதல் ஐக்கிய உலகக் கல்லூரி கவின்மிகு சூழலில் அமைந்துள்ளது. வில்லியம் ரெண்டால்ப் ஹியர்ஸ்ட் என்னும் அமெரிக்க புதுப்பிக்கப்பட்ட 13ஆம் நூற்றாண்டு மாளிகையை புகழ் பெற்ற பிரெஞ்சு பன்னாட்டாளர் அந்தோனி பெஸி என்பவர் வாங்கி இக் கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கினார். கம்பீரமாக பழங் கோட்டை போன்றிருக்கும் இந்த மாளிகையைச் சுற்றி புதிதாகக் கட்டப்பட்ட மிக நவீனமான வகுப்பறைகளும், விடுதிகளும் காட்சி யளிக்கின்றன. இவற்றைச் சுற்றி உள்ள அடுக்குப் பூங்காக்கள் பிரிஸ்டல் கால்வாயின் சுமித்தோடும் ஆபத்தான நீர்மட்டத்திற்கு அழைத் செல்கின்றன.

செயின்ட் டானட்டில் ஐக்கிய உலகக் கல்லூரி திட்டத்தின் பரீட் சார்த்த முதல்நிலை முடிந்துவிட்டது. 1969ஆம் ஆண்டு செப்டம்பர்மாதத்தில் 36 நாடுகளைச் சார்ந்த 2,300 மாணவர்கள் சேர்ந்த பொழுது கல்லூரி மாணவர் எண்ணிக்கை நிறைவு பெற்றது. கால் பகுதி மாணவர் இங்கிலாந்திலிருந்து வந்தவர்கள். மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா, கனடா, ஸ்காண்டிநேவியா ஆகிய நாடுகளும் குறிப்பிடத்தக்க அளவுக்கு மாணவர்களை அனுப்பின. மேற்கு ஐரோப்பிய நாடுகளும் மாணவர்களை அனுப்பியிருந்தன. கிழக்கு ஐரோப்பியர்களும் முதல் முறையாகச் சேர்ந்துள்ளனர். ஆப்பிரிக்கர், தென் அமெரிக்கர், மலேசியர், இந்தியா ஆகியோரும் இக்கல்லூரியில் சேர்ந்துள்ளனர்.

பன்னாட்டுக் கல்விக்கும், ஒத்துழைப்புக்கும், இது கண்கூடான எடுத்துக் காட்டு எனலாம். பன்னாட்டு மாணவர்களும் வகுப்பறைகளிலும், வசிக்கும் இடங்களிலும் கலந்து பழகுகிறார்கள். இவர்களுக்கு ஆங்கிலமே பொது மொழி; தொடர்பு மொழி, பயிற்று மொழி. ஆனால் கல்லூரித் தாழ்வாரத்திலும் உணவறைகளிலும் பின்னிஷ் முதல் ஸ்வாகிலி வரை பலப்பல மொழிகளையும் கேட்க முடிகிறது. இன்றைய மொழிகளைக் கற்பிப்பதில் கல்லூரி கவனம் செலுத்துகிறது.

எல்லா மாணவர்களும் குறைந்தது ஒரு வெளி நாட்டு மொழியையயாவது கற்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது இதுவரை இங்குப் பயின்றவர் உலகெங்குமுள்ள 150 பல்கலைக் கழகங்களுக்கு திரும்பச் சென்றுள்ளார்கள்.

செயின்ட் டானட் கல்லூரியில் தொடக்கத்தில் பயின்றவருள் பெரும்பாலானவர் நார்வே நாட்டவர்.

அரசாங்கங்களின் கல்வித்துறைகள், வெளிநாட்டுத் துறைகள், ஐக்கிய உலகக் கல்லூரியின் தேசியப் பிரிவுகள் முதலியவற்றின் பொருளிதவி இதற்கு மிகத் தேவைப்படுகிறது. ஏனென்றால் இம் கல்லூரி ஒரு தனியார் அறக் கட்டளை நிறுவனமாகும். போட்டி நுழைவுத் தேர்வு மூலம் கல்வித் தரத்தை இக் கல்லூரி பாதுகாக்கிறது. அதே நேரத்தில் பல்வேறு பின்னணி கொண்டவர்களும் இங்குச் சேர்க்கப்பட்டுள்ளனர். வேல்ஸ் சுரங்கத் தொழிலாளி மக்களும், கிரேக்க டாக்ஸி ஓட்டியின் குழந்தைகளும், ஸ்காண்டிநேவிய கப்பல் உரிமையாளர், மற்றும் ரூஹர் எஃகு ஆலைத் தொழிலதிபர் மக்களுடன் சேர்ந்து படிகின்றனர். நார்வே தச்சரின் மகள் ஒரு மாணவி. இவர் இத்தாலி நாட்டில் மாபெரும் கார் உற்பத்தியாளரின் மகனை மற்றொரு மாணவருடன் படிக்கிறாள். கிரேக்க நாட்டுக் கப்பலதிகாரியின் மகனும் இதே வகுப்பில் ஒரு மாணவன். இது கல்வித்தரத்தைப் பொருத்த மட்டும் ஆடம்பரமான உயர்தரப் பள்ளிதான்; படித்தவர்களைப் பொருத்தல்ல.

நம் அனைவரின் நிலையும் ஒன்றே

இவரிடையே தேசிய இனங்கள் சமய நம்பிக்கைகள், அரசியல் சார்புகள் பெரிதும் வேறுபடுகின்றன. கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பிய நாட்டவரும் உள்ளனர். தென்னுப் பிரிக்க அகதிகளின் பிள்ளைகளுடன் ரொடீஷியா வெள்ளையரின் மக்கள் கலந்து படிக்கின்றனர். அராபியருடன் இஸ்ரேலியர் சேர்ந்து படிக்கின்றனர். இது ஒரு சிற்றிளம் ஐ. நா. எனலாம்.

இப் பன்னுட்டுச் சமுதாயத்தின் பாடதிட்டம் கடினமானது. மாணவர் மூன்று நான்கு முக்கிய பாடங்களை (உயர்நிலை) தேர்ந்தெடுக்க வேண்டும். இவற்றுடன் 4 அல்லது 5 துணைப் பாடங்களையும் கற்க வேண்டும். வாரத்திற்கு 8 மணி நேரம் மலைப் பயிற்சியும் உண்டு. மேலும் மாலை நேர விரிவுரைகள் பட்டிமன்றங்கள், கல்லூரி சங்கக் கூட்டங்கள், தனிப் பயிற்சி வகுப்பு முதலியனவும் உள்ளன. எடுத்துக்காட்டாக சோவியத் நாட்டின் தூதரகப் பிரதிநிதி ஒருவரின் பேச்சை யடுத்து மேற்காசியா பற்றிய உரைக் கோர்வை நடைபெறும். இதில் ஜோர்டான், இஸ்ரேல் நாட்டினரும் பங்கு பெறுவர். நாடு கடத்தப்பட்ட பாண்டு மாணவர் (ஐ. நா. உதவியுடன் படிப்பவர்) தென்னுப் பிரிக்க அதிகாரியைக் கேள்விகள் கேட்பார். இவ்வாறு இங்கு எல்லா அரசியல் கொள்கைகளுக்கும் பிரதிநிதித்துவம் உள்ளது.

பாட திட்டத்தில் வரலாறு மத்திய இடம் பெறுகிறது. தம் நாட்டில் படித்த வரலாற்று நூல்களை மாணவர் இங்குக் கொண்டு வருகின்றனர். இவற்றில் நவீன வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றி பெருமளவுக்கு கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. சைப்ரஸ் பற்றி கிரேக்கருக்குக் கற்பிக்கப்படுவதும் துருக்கியருக்குக் கற்பிக்கப்படுவதும் வேருக உள்ளது. பிஸ்மார்க் பற்றி ஆங்கிலேய மாணவருக்கு கூறப்படுவது, ஜெர்மன் மாணவருக்கு கூறப்படுவதிலிருந்து முரண்படுகிறது. இக்கருத்து முரண்பாடுகளின் மிகுதியை நோக்கி, இக் கல்லூரியே ஒரு புதிய திட்டத்தை தொடங்கியுள்ளது. இதன்படி சமுதாயத்தின் கண்களுக்கு இத்தேசிய வரலாறுகளைக் காட்டி ஒப்பு நோக்கி உண்மை காண முயற்சி மேற்கொள்ளப்படும்.

பலவகையான இளைஞர்களுக்கும் இக் கல்லூரியில் இடமுண்டு. எதைப் பற்றியும் கவலைப் படாதவர், தீவிர புத்தியுடையவர், கனவு உலகிலேயே சஞ்சரிப்பவர், தனிப் போக்குக் கொண்டவர், எதற்கும் ஒத்துப் போகும் பண்பினர் எனப் பலவகையினர் உள்ளனர். இது இளைஞரின் சிறு உலகம் இவர் போன்றவர்களிடையே எழக்கூடிய பிரச்சினைகள் இங்கும் எழத்தான் செய்கின்றன. ஆனல் இக்கல்லூரி நான் பார்த்த அளவில் இப்பிரச்சினைகளில் பெரும்பாலானவற்றுக்கு தீர்வு காண்பதில் வெற்றியடைந்திருக்கிறது.

கல்லூரிக்குப் புதிதாக வந்து சேர்ந்தபொழுது அவர்களிடையே கசப்புணர்ச்சியும், வெறுப்பும் உண்மையிலேயே காணப்பட்டன. தற்போதைய உலகைப் போல. எனவே வகுப்பறையிலும் மற்ற இடங்களிலும் பன்னுட்டு ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதுடன் இக்கல்லூரி வேறு ஒரு சில சிறப்புத் திட்டங்களையும் மனித உயிரைக் காப்பாற்றுவது என்ற சிறந்த பன்னுட்டுத் தத்துவத்தின் அடிப்படையில் வகுத்தது. முதலுதவி, உயிர் காக்கும் முறைகள் ஆகியவற்றை எல்லா மாணவரும் பயின்று கல்லூரியின் உயிர் காப்புப் படையில் ஏதாவது ஒரு அணியில் பணியாற்றுகின்றனர். கடல்பகுதி, உயிர் மீட்பு அணி, குன்றுப் பகுதி உயிர் மீட்பு அணி, உள்நாட்டுப் படகுத்துறை உயிர் மீட்பு அணி, சமூக சேவையணி என்பன அவ்வணிகளாம். இவ்வணிகள் வெறும் விளையாட்டு அணிகளல்ல. செயின்டானட் மத்தியப் பகுதியாகக் கொண்ட பாறைப் பகுதியில் 10 மைல் தொலைவிற்கு உயிர் மீட்புப் பணியில், இவை பிரிட்டன் நாட்டு உயிர் மீட்பு அவையின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது.

அபர்பான் என்னுமிடத்தில் மாபெரும் நிலக்கரிச் சுரங்க விபத்தின் காரணமாக ஒரு சிறு கிராமத்தின் பகுதியும், ஒரு ஆரம்பப் பள்ளியைச் சுற்றி நிலம் சரிந்து அமிழ்ந்து பயங்கரமான பள்ளம் உண்டாக்கிய பொழுது முதலில் உதவிக்கழைக்கப்பட்ட தன்னியக்க சேவை நிறுவனங்களுள் இக்கல்லூரியின் உயிர் மீட்பு அணிகளும் சிலவாம்.

இம் முதல் கல்லூரி பன்னுட்டுக் கல்வித் துறையில் முக்கியமான முதல் முயற்சி என்றும், அதிலும் குறிப்பாக ஜெனிவாவிலுள்ள பன்னுட்டுப் பட்டப் படிப்பு அலுவலகத்தின் மூலமாக உலக முழுவதும் ஏற்றுக் கொள்ளத்தக்க பன்னுட்டுப் பல்கலைக் கழக நுழைவுத் தேர்வுக்கு வழி செய்ய இது ஆற்றிவரும் பணி சிறந்தது என்றும், இன்று எல்லோரும் அறிந்துள்ளனர். கல்லூரி துவங்கும்போது இத்தகைய தேர்வு எதுவுமில்லை என்றுலும், கல்லூரி மாணவர் அனைவரும் நாடு வேறுபாடின்றி ஒரே விதமான பாடங்களைப் பயின்று, ஒரே ''மெட்ரிக்குலேஷன்'' தேர்வு எழுத்த வேண்டும் என்று கருதப்பட்டது. இதற்கு எந்த நாட்டில் இக் கல்லூரி உள்ளதோ அந்த நாட்டு ''மெட்ரிக்குலேஷன் தேர்வுக்கு (இந்தக் கல்லூரியைப் பொறுத்த மட்டில் பிரிட்டன் நாட்டு ஜி. ஸி. இ உயர்நிலைத் தேர்வுக்கு) பயிற்சி அளிப்பதென்றும் பின்னர் வெளி நாட்டுக் கல்வி அமைச்சகங்கள், பல்கலைக் கழகங்கள் முதலியவற்றுடன் கலந்து தேவையான கூடுதல் பாடங்களைச் சேர்த்து அதன் வழி அவ்வந்நாட்டு ''மெட்ரிக்குலேஷன்'' தேர்விலிருந்து இம்மாணவர்களுக்கு ''விலக்கு'' பெறுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இவ்வாருன ''உடன்படிக்கைகளைக் காண்பதுதான் கல்லூரியின் முதல் கல்விப் பணியாக அமைந்தது. ஆனல் இதற்குக் காலமும் பொருளும் மிகுதியாகச் செலவாயின; சிக்கல்கள் மிகுந்தன; திட்டம் முழுவெற்றி காண முடியவில்லை. ஏனென்ருல் பல நாடுகள், அவற்றுள்ளும் குறிப்பாக 'பிரான்சும், பெல்ஜியமும் இங்கிலாந்தின் ஜி. ஸி. இ. தேர்வை ஏற்க மறுத்துவிட்டன.

இருப்பினும் எல்லாத் தேசிய தேர்வுகளும் பன்னுட்டுப் பள்ளிக்குப் பொருந்தாதவையே என்பதால் இக் கல்லூரி ''இண்டர் நேஷனல் பக்காலுரேட்'' (ஐ. பி.ஓ) என்னும் பன்னுட்டுப் பல்கலைக் கழகப் பட்டம் ஒன்றை தோற்றுவித்தது. இக்கல்லூரி ஆசிரியர்கள் இப்பட்டப்படிப்புக்கான பாட திட்டத்தை உருவாக்குவதில், அரும் பாடுபட்டனர். தற்போது இப் பட்டத்தின் முதல் சோதனைத் தேர்வுக்கு மாணவர்களை கல்லூரி பயிற்றுவித்து வருகிறது.

யுனெஸ்கோவின் முழு ஆதரவு பெற்ற இந்த ஐ.பி.ஓ. பரிசோதனையில் உலகம் முழுவதுமுள்ள பல்கலைக் கழகங்கள் ஆர்வம் காட்டுகின்றன. பல இப்பட்டத்தைத் சமமானது என அங்கீகரித்துள்ளன. செயின்ட் டானட்டிலுள்ள கல்லூரி, செப்டம்பர் 1971இல் ஐ. பி. பட்டப் படிப்புக்கு முழுமையாக மாறிவிடும் என்பதிலும், இனி தோன்றக் கூடிய ஐக்கிய உலகக் கல்லூரிகளுக்கும் ஐ.பி. பட்டப் படிப்புத் திட்டம் சிறந்ததொரு பாட திட்டமாகத் திகழும் என்பதிலும் ஐயமில்லை.

இந்த முன்னேடி திட்டத்தில் பலரும் காட்டும் ஆர்வமும் இவ்வகையில் செயின்ட் டானட்டில் நிறுவப் பட்ட முதல் கல்லூரியின் வெற்றியும், இத்தகைய பன்னுட்டுக் கல்விக்கு இந்த நிலையிலுள்ள தேவையை—ஐரோப்பாவில் மட்டுமன்றி உலக முழுவதும் உள்ள தேவையை எடுத்துக் காட்டியுள்ளன. இதனல் ஐக்கிய உலகக் கல்லூரியின் வளர்ச்சியில் இரண்டாம் நிலை, தோன்றியுள்ளது. அதுதான் ''பல கல்லூரித் திட்டம்''.

இதற்காக, மவுண்ட் பாட்டன் பிரபுவின் தலைமையில் பன்னுட்டவை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உலகெங்கிலும் இத்தகைய கல்லூரிகள் நிறுவும் இம்முக்கிய பணியைதான் ஏற்றுக் கொண்டதற்கான காரணங்களை மவுண்பாட்டன் பிரபு பின்வருமாறு விளக்குகிருர்.

''இந்தப் பன்னுட்டுக் கல்வி, முயற்சி உலக சமாதானத்திற்கு வழிகோலும் என்று நான் நம்புவ

(தொடர்ச்சி 34ஆம் பக்கம் பார்க்க)

பன்னாட்டு முயற்சிகளுள் முக்கியமானதாகிய மனித உயிரைக் காப்பதை அடிப்படையாகக் கொண்ட திட்டமொன்றை அட்லாண்டிக் கல்லூரி தொடங்கியுள்ளது. கல்லூரியின் கடற்கரை, மலைச்சரிவு, கரை அண்மை காப்பு அணிகள் 30 பேரின் உயிரைக் காப்பாற்றியுள்ளன. இவை பாறை செறிந்த 10மைல் வேல்ஸ் கடற்கரையில் செல்பவருக்குப் பாதுகாப்பளிக்கின்றன. 18 வயதுள்ள நார்வே மாணவி பிரிட்டனின் அரசதேசிய உயிர் காப்புப் படகு நிறுவன வரலாற்றில் முதல் முறையாக படகோட்டிப் பயிற்சி பெற்றிருக்கிறாள். உயிர் காப்புப் படகு நிறுவனத்தின் புகழ்மிகு நிலையமாகிய இக்கல்லூரி மாணவர்களால் கட்டப்பெற்ற காப்புப் படகுகளைப் பயன்படுத்தி வருகின்றது. மேலும் வலப்புறமும்: வழக்கமான பயிற்சியின் விளைவாக மாணவர் கடல் காப்பு அணிகள் திறமையுடன் செயல்படுகின்றன.

Photos © Maurice Broomfield, London

(26 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல துணை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் முனைந்தன. இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்; கலை, கைவினைப் பயிற்சி வகுப்புக்கள் நடத்துதல்; மாதர் சங்கங்கள்; கவர்ச்சிகரமான சமூக நிகழ்ச்சிகள் ஏற்பாடு; ஆண்களுக்கான மதிய விருந்துக் கழகங்கள்; விவாதக் கூட்டங்கள்; பேருரை நிகழ்ச்சிகள்; திரைப்பட, நாடக, நிகழ்ச்சிகள்; அயல்நாட்டுப் பயணக் குழுக்களுக்கு ஏற்பாடு செய்தல்; விற்பனைக் காட்சிகள், ஏலக் காட்சிகள், அலங்கார உடைப் பவனிக் காட்சிகள், ஏற்பாடு செய்தல் ஆகிய பல நடவடிக்கைகளில் அவை ஈடுபடலாயின.

அரும்பொருட்காட்சி மனையின் அடிப்படைக் குறிக்கோள்களிலிருந்தும், அவற்றின் சமூகப் பங்கையும் பொறுப்பையும் ஒட்டியும், இந்த நடவடிக்கைகள் வளர்ந்திருந்தால், அவற்றை நாம் பாராட்டக் கூடும். ஆனால் பெரும்பாலும் என்ன நடந்துள்ளதென்றால், அரும்பொருட்காட்சி மனையாக இயங்கும் வகை அறியாத காரணத்தால், அவை, பொழுது போக்கு நிலையமாகவோ, சமூகச் சங்கமாகவோ, பள்ளி, கல்லூரியாகவோ, விற்பனைச் சந்தையாகவோ, மாறியுள்ளன.

இந்தக் கவர்ச்சிகரமான துணை நிகழ்ச்சிகள், நிதி திரட்டுவதற்கோ, பொதுமக்கள் கவனத்தை ஈர்ப்பதற்கோ அவசியமானவை என்றும், மரபு வழிவந்த அரும்பொருட்காட்சி மனையின் நடவடிக்கைகளுக்குப் பொருளும் வலுவும் அளிப்பதற்கு அவை அவசியமானவை என்றும் வாதம் செய்வது, வலுவான வாதமாகாது. அரும்பொருட் காட்சிமனை என்ற அடிப்படையில், அது பொது மக்கள் ஆதரவைப் பெறவும், அவர்கள் ஈடுபாட்டைக் கவரவும், அதன் நடவடிக்கைகள் பயனுள்ளதாகவும் பொருத்தமுள்ளதாகவும் அமையச் செய்வதற்கும், தவறிவிட்டது என்பதை ஒத்துக் கொள்வதாகவும் ஆகும்.

வட அமெரிக்காவில் 'அரும்பொருட்காட்சி மனைப் புரட்சி'யில் மேலோங்கியுள்ள போக்குகளில் ஒன்று, அரும்பொருட்காட்சி மனைகளல்லாத நிலையங்கள் உருவாகியுள்ள போக்கு. மூலப் பொருட்கள் சேகரிப்பதை நம்பாமல், கண்காட்சிச் சாதனங்கள் மூலமாகப் பொதுக் கல்வியுடன் தொடர்பு கொண்ட நடவடிக்கைகளும் கண்காட்சிகளும் நடத்தும் நிலையங்களே இவை.

எடுத்துக் காட்டாக, விஞ்ஞான, தொழில் நுட்ப நிலையங்கள் இயங்குகின்றன. அடிப்படைக் கோட்பாடுகளையும் செய்முறைகளையும் விளக்கும் காட்சிகளையும் சாதனங்களையும் முழுக்க முழுக்க நம்பி இவை இயங்குகின்றன. சுகாதார அரும்பொருட் காட்சி மனைமகளும் இவை போன்றவையே. இவையும் உருவகச் சின்னப் பொருட்களையும் மாதிரிப் பொருட்களையுமே பெரிதும் நம்புகின்றன. சில இயற்கை விஞ்ஞான அரும்பொருட் காட்சி மனைகளும்; குறிப்பாக இயந்திர நிறுவனங்களால் நிர்வகிக்கப் படுபவையும், காட்சிப் பொருட்கள், சித்திர விளக்கங்கள் ஆகியவற்றையே முக்கியமாக நம்புகின்றனவே ஒழிய, மூலப் பொருட்களைச் சேகரிப்பதற்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிப்பதில்லை.

இப் போக்கைக் குறைகூறும் உத்தேசம் எனக்கில்லை. ஆயினும் கண்காட்சி நிலையம் எவ்வளவு திறமையாக இயங்கினாலும், அதன் முக்கிய நோக்கம், மெய்ம்மையைச் சித்திரிக்க மாதிரிப் பொருட்களைச் சேகரிப்பது என்று இருந்தாலொழிய, அது அரும் பொருட்காட்சி மனையாகாது என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

இப்புதுக் காட்சி நிலையங்கள் வளர்ச்சியின் ஒரு வருத்தத் தக்க அம்சம் என்னவென்றால், அவை அடிக்கடி அரும்பொருட்காட்சி மனைகள் என்று அழைக்கப்படுகின்றன. இதன் பயனாக, இவ்விரு வகையான நிலையங்களையும் ஒப்பிடும் போக்கு எழுகிறது. டெலிவிஷனைத் திரைக்காட்சியுடனும், திரைப்படத்தை நாடக அரங்குடனும், ஒப்பிடுவது எவ்வளவு பொருத்தமற்றதோ, அதுபோலவேதான் அரும் பொருட்காட்சி மனையை இக் காட்சி நிலையங்களுடன் ஒப்பிடுவது. இதையும் விட வருத்தத் தக்க போக்கு, இக் காட்சி நிலையங்களை, அவற்றின் சிறப்பான அம்சங்களைக் கொண்டு பிரசாரம் செய்யாமல், அரும்பொருட் காட்சி மனைகளின் பழமையிலும் மரபிலும் ஊறிய பிற்போக்கிலிருந்து விடுதலை பெற்று விளங்கும் நிலையங்களாக, இவற்றைப் பிரச்சாரம் செய்வது. இத்தகைய குறைபாட்டுக்குப் பழமையில் ஊறிய அரும்பொருட் காட்சி மனைகள் இடமளித்திருக்கக் கூடும். ஆனால் அதற்குத் தீர்வு காணும் வழி, அரும்பொருட்காட்சி மனைகள் என்ற அடிப்படையில் உயர்வு காண்பதே ஒழிய, கண்காட்சி நிலையங்களுடன் போட்டியிட முற்படுவது அல்ல.

கண்காட்சி நிலையங்கள் பொது மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளது உண்மையே. அதிலும் குறிப்பாகப் பெரிதும் இயந்திரமயமாகியுள்ள நகரப் பகுதிகளில், அதிகார பூர்வமான கல்வி அமைப்புக்கு அப்பாற்பட்டுக் கல்வியறிவைப் புகட்ட, இந்நிலையங்கள் பெரிதும் உதவுகின்றன. ஆனால் வெற்றி அடைய வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, வெற்றி அடைந்து விட்ட அமைப்புகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதில் ஆபத்து உள்ளது. அதிலும் அரசியல் ரீதியாகப் பொதுமக்கள் ஆதரவைக் கவர்ந்து, அவர்கள் நிதி ஆதரவைப் பெறப் போட்டியிட வேண்டிய நிலையில் உள்ள அரும்பொருட்காட்சி மனைகளைப் பொறுத்தவரை, இந்த ஆபத்து அதிகமாகிறது.

நாம் இதுவரை கண்டுள்ள போக்குகளினால், அரும்பொருட் காட்சி மனைகளின் அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றில் ஏற்படும் விளைவுகளை நாம் இப்பொழுது ஆராய வேண்டும். இதன் பயனாக, அரும்பொருட் காட்சி மனைக் காப்பாளர் அல்லாத நிர்வாகிகள், அதிக முக்கியத்துவமும் உயர்ந்த நிலையும் பெற்றுள்ளனர். அரும் பொருட்காட்சி மனை அமைப்புக்குள்ளாகக் காப்பாளருக்கும், காப்பாளர் அல்லாதாருக்கும் போட்டி ஏற்பட்டு, அந்தஸ்துப் பிரச்சினை எழுந்துள்ளது.

கண்காட்சி அமைப்பாளர், கல்வி புகட்டுவோர், நிர்வாகிகள் ஆகியோர் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு பெற்று, திட்டத்தில் அதிகப் பங்கு பெற்று, அமைப்பில் அதிக செல்வாக்கு பெற்றுள்ளனர். காட்சிப் பொருள் பராமரிப்பாளரும், நுட்பத் தேர்ச்சிபெற்ற அலுவலரும், பதிவாளரும், நூல் நிலையக் காப்பாளரும், புதிய அந்தஸ்தும் செல்வாக்கும் கோரி, அவற்றைப் பெற்றும் உள்ளனர். அரும்பொருட் மனைக் காப்பாளர் காலம் தாழ்த்தி மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கையைப் பொருட்படுத்தாமல், அரும்பொருட்காட்சி மனைத் தொழில் எனப்படுவது, (வட அமெரிக்காவில் எந்த வேலையில் ஈடுபட்டுள்ளோரையும் குறிக்கத் தொழில் என்ற சொல் பொதுப்படையாகக் கையாளப்படுகிறது), அரும்பொருட்காட்சி மனையை நடத்துவதற்குத் தேவையான சிறப்புத் தேர்ச்சியும் பயிற்சியும் பெற்ற அனைவரையும் தழுவலாயிற்று. கொள்கை அடிப்படையான இந்த செல்வாக்கு நடுநிலைப் பிரச்சினை, இன்றைய அரும் பொருட் காட்சி மனை உலகில் உற்சாகமூட்டும் நிலையாக அமையவில்லை. ஆயினும் இது உருவாகியுள்ள தன்மையைப் பார்த்தால், நன்மை ஏற்படக்கூடும் என்ற நம்பிக்கைக்கு இடம் பிறக்கின்றது.

எனக்குத் தெரிந்து, அரும்பொருட் காட்சி மனை ஒன்றில், நேர்த்தியான, சிறப்பான, ஆசார உடை அணிவது அரும்பொருட் காட்சி மனைக் காப்பாளருக்குரிய தகுதிகளில் ஒன்றாய்க் கருதப்பட்டது. அலுவலகப் பெண் பணியாளர்கள் அங்கியும், தொழில் நுட்பப் பணியாளரும், தேர்ச்சிபெற்ற நுட்பப் பணியாளரும், ஆய்வுக்கூட அங்கிகளும் அணியலாயினர். பொது மக்களுக்கு, வெள்ளை அங்கி, ஆராய்ச்சி அறிஞர், அல்லது அறிவியல் நிபுணர்க்கு உரிய அறிகுறியாகப் பட்டது. அதற்குப் பின்பு, காப்பாளர் வெள்ளை அங்கியை அணிந்து கொண்டு, மற்ற தொழில் நுட்பப் பணியாளருக்குப் பழுப்பு நிற அங்கிகள் தந்தனர். இதையொட்டிப் பெண் பணியாளரும் மேலங்கிகளைக் கைவிட்டனர். சிலர் நாகரிக உடை உடுத்தினர். சிலர் வெள்ளை அங்கிகளை அணியத் தொடங்கினர்.

இதை யொட்டிக் காப்பாளர், அல்லது இயக்குநராவது, சிவப்புப் பட்டை தாங்கிய வெள்ளை அங்கி அணிய முற்பட்டிருப்பார்கள் என்று எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் நல்ல வேளையாக, இந்த அளவுக்கு உடைப் பித்து முற்றவில்லை. காப்பாளர் நேர்த்தியான, ஆசார உடைக்குத் திரும்பினர். இந்த வேடிக்கை நிகழ்ச்சியிலிருந்து தெளிவாகும் படிப்பினை, அந்தஸ்து, செல்வாக்குப் பிரச்சினை உண்மையில் பெரிதும் வலுத்தது, வெளிப்படையாயிற்று என்பதும், உத்தரவாத நிலை உணர்வு இல்லாமல், தங்கள் நிலை பாதுகாப்பானதல்ல என்ற குழப்ப உணர்வு இந்தப் பணியாளரைப் பற்றியது என்பதும்தான்.

புதுத் துறைகளின் வளர்ச்சியும், அதுவரைப் பின்னணியில் இருந்த சில துறைகளின் வளர்ச்சியும், அரும் பொருட் காட்சி மனைகளின் அமைப்பையும் நிர்வாகத்தையும் பாதிக்க முற்

பட்டன. சில அரும்பொருட்காட்சி மனைகள், பொதுத் தொடர்பு நிலையங்களையும் டெலிவிஷன் நிலையங்களையும் அமைத்தன. அரும்பொருட்காட்சி மனைகளின் கல்விப் பிரிவுகள், வளர்ந்து விரிவடைந்தன. உறுப்பினர் அலுவலகங்கள், சிறப்பு நிகழ்ச்சிகளை அமைக்கச் செயலகங்கள் ஆகியவை விரிவாக்கப்பட்டன. அதுவரை தச்சுப் பட்டரைகளாக மட்டுமே இருந்த காட்சி வடிவமைப்புக் கூடங்கள், பெரிய ஆராய்ச்சி, உற்பத்திக் கூடங்களாக வளர்ந்து, தேர்ச்சி பெற்ற பல நிபுணர்களை ஈடுபடுத்தலாயின. அரும்பொருட்காட்சி மனையின் துணை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்றிருந்த பிரிவு, விரிவினைப் பிரிவாக வளர்ந்தது. சிறிய அளவில் இருந்த கணக்குப் பிரிவு, நிர்வாகப் பிரிவாக மலர்ந்தது.

பல அரும்பொருட் காட்சி மனைகளில், இந்த மாறுதல் கட்டத்தில், 'காப்பாளர்' என்ற பட்டம் தன்னுடைய முக்கியத்துவத்தை இழக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இதற்கிணங்கக் கண்காட்சிப் பொருள் காப்பாளர் (வடிவமைப்பு), கண்காட்சிக் கல்விக் காப்பாளர், காட்சிப் பொருள் பராமரிப்புக் காப்பாளர், (பராமரிப்பாளர்), விரிவினைக் காப்பாளர் (நிகழ்ச்சி நிரல் செயலாளர்), ஆகிய பல புதிய பதவிகள் தோன்றியுள்ளன.

இவற்றால் மொத்தத்தில் குழப்பமும், சில வேளைகளில், பூசலும் ஏற்பட்டுள்ளன. பொது மக்களுடன் தொடர்பு கொள்ளச் சிறந்த திட்டங்கள், தீவிரப் பிரச்சாரப் பள்ளிக் குழந்தைகளுக்குக் கல்விப் பயிற்சி அளிக்க விரிவான திட்டங்கள், தொடர்பற்றனவாய் இருந்தால்கூடக் கவர்ச்சிகரமாய் உள்ள வயதுவந்தோர்க்கான திட்டங்கள் ஆகியவை பொதுமக்களின் ஆதரவைக் கவர்வதற்கும், அரசாங்கத்தின் பொது நிதியிலிருந்து உதவி பெறுவதற்கும் அவசியமாகத் தோன்றும் நிலை ஏற்பட்டுள்ளது. சில வேளைகளில், அரும் பொருட் காட்சி மனைகளின் அடிப்படைத் திட்டங்களுக்குப் பாதகமான முறையில் இந் நடவடிக்கைகள் விரிவடைந்துள்ளதால், அரும் பொருட் காட்சி மனைக் காப்பாளர் சிலர் இவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்ததில் நியாயம் இல்லாது போகவில்லை. நிர்வாகப் பொறுப்புக்களுக்காக விரிவடைந்த அமைப்புக்கள், சில வேளைகளில், தேவைக்கு மீறிப் பெருகி, நிறுவனங்களின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக உள்ள அதிகார அமைப்புகளாய் வலுத்துள்ளன. பொதுமக்கள் ஆதரவைக் கவர வேண்டுமென்ற ஆர்வத்தில், பார்வையாளருக்கு ஏற்படும் அனுபவத்தின் தரத்தை முக்கியமாக மதிக்காமல், எத்தனை பார்வையாளர் வந்தனர் என்ற எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு வெற்றியை மதிப்பிடும் போக்கு பரவியுள்ளது.

சுருங்கச் சொன்னால், அரும்பொருட் காட்சி மனைகளின் அமைப்பிலும் நிர்வாகத்திலும், இரு முக்கிய வழிகளில் மாறுதல்கள் ஏற்பட்டன. முதலாவதாக, அரும்பொருட்காட்சி மனை ஆட்சிப் பொறுப்பைக் காப்பாளருடன், காப்பாளரல்லாத மற்றப் பணியாளரும் பகிர்ந்து கொள்ளலாயினர்—இந்தப் பொறுப்புப் பங்கீட்டில் சமநிலை ஏற்படவில்லை என்ற போதிலும். இரண்டாவது, பொது மக்களுடன் தொடர்பு கொள்வதையும், பார்வையாளர் கூட்டம் ஒன்றை உருவாக்குவதையும், முக்கிய பொறுப்புகளாக, நிர்வாகம் வரவரக் கருதலாயிற்று.

இவ்வாறு பொது மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதிலும், பொது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமே என்பதிலும் நிர்வாகத்துக்கு இருந்த கவலையும், பொதுமக்களிடமிருந்து நிதியுதவி பெறுவதில் போட்டியிடுவதில் ஆர்வமும் தான் முக்கியமாக இருந்தனவேயொழிய கல்விக்குச் சாதகமான இணையற்றதொரு சூழ்நிலையாக அரும் பொருட்காட்சி மனை அமைய வேண்டுமென்ற பொது மக்கள் தேவையோடு ஒட்டியதாக இந்த நடவடிக்கைகள் பெரும்பாலும் மேற்கொள்ளப்படவில்லை. பொது மக்களுக்காக எல்லாத் துறைகளையும் தழுவிப் பொதுவாக அமைக்கப்படாமல், குழந்தைகளுக்காகவும், சில சிறுபான்மைத் தொகுதிகளுக்காகவும், அமைக்கப்பட்ட அரும் பொருட்காட்சி மனைகள் இவற்றிற்கு விலக்காக இருந்தன.

இப்பொழுது நாம் ஆய்ந்து வரும் போருக்குப் பிந்திய ஆண்டுகளுக்கு, நீண்ட காலம் முன்பாகவே, குழந்தைகள் அரும்பொருட்காட்சிமனைகள் சில முக்கிய ஊர்களில் நிறுவப்பட்டிருந்தன. அவற்றில் சில நல்ல புகழ் ஈட்டியிருந்தன. இருந்த போதிலும், 1940-க்குப் பின் தான், இந்த மனைகளின் வளர்ச்சி, நம் கவனத்தைக் கவரும் அளவு, விரிந்து வலுத்துள்ளது.

மரபு வழி வந்த அரும் பொருட் காட்சி மனைகள், குழந்தைகள் புதிய அனுபவம் பெற்றுப் புது உண்மைகள் மூலம் கல்வியறிவு பெறுவதற்குப் போதுமான அளவில் வாய்ப்பளிக்கவில்லை என்பதை அரும்பொருட் காட்சி மனைகளின் கல்வி நிபுணர்கள் உணர்ந்தனர். பொருட்களைப் பார்க்கும்போது, அவற்றைத் தொடவேண்டும், கொஞ்ச வேண்டும் அவற்றை ஆராய வேண்டும், அவற்றில் புதுமைகள் காண வேண்டும் என்ற ஆவல் குழந்தைகளுக்கு இயல்பாக ஏற்படுகிறது. அரும் பொருட் காட்சி மனையில், அவர்கள் தொடக் கூடாத, அசையாத, காட்சிப் பொருட்களைக் காண்கையில் அவர்களுக்கு ஏற்படும் மன முடக்கத்தை இந்த நிபுணர்கள் உணர்ந்தார்கள். அப் பொருட்களுடன் நெருங்கிய உறவு கொண்டு, காட்சிப் பொருட்களைக் கையாண்டு, அவற்றைக் கொண்டு புது வடிவமைப்புகளை உருவாக்க வேண்டுமென்று குழந்தைகளுக்கு ஏற்படும் இயல்பான வேட்கையை அவர்களால் உணர முடிந்தது. இதற்கான வாய்ப்புகள் உள்ள அரும் பொருட் காட்சி மனைகளில் குழந்தைகளுடன் தொண்டாற்றியுள்ளவர்கள், புதுமை காணக் காணக் குழந்தைகளுக்குள்ள வேட்பின் வலுவையும் ஆர்வத் துடிப்பையும் நன்கு உணர்வார்கள்.

ஆனால் மரபு வழி வந்த அரும் பொருட் காட்சி மனைகளில் உள்ள குறைபாடுகள், குழந்தைகள் அனுபவம் பெற வாய்ப்பளிக்கவில்லை என்ற அளவில் மட்டும் தான் உணரப்பட்டது, சற்று விசித்திரமானதே. வயது வந்தவர்கள் தேவையைப் பற்றி எண்ணும்போது, அரும் பொருட் காட்சி மனைக்கு வந்த ஒரு சில பார்வையாளரைப் பற்றி எண்ணினார்களே யொழிய, அங்கு வராத மிகப் பெரும்பாலோர் பற்றி எண்ணவில்லை என்பது இதற்குக் காரணமாக இருக்குமென்று நான் ஊகிக்கின்றேன். அரும் பொருட் காட்சி மனைக்கு வந்து, பணியாளருடன் தொடர்பு கொண்ட வயது வந்தோர் பெரும்பாலும், கல்வி பெற்ற நடுத்தர வர்க்க சிறுபான்மைத் தொகுதியைச் சேர்ந்திருந்ததால், மரபு வழி வந்த அரும் பொருட்காட்சி மனையை ஆதரித்து, அது சிறுபான்மையினருக்குப் பயன்படும் வகையில் அமைந்துள்ளதையே பாரட்டுபவர்களாகவும் இருக்கலாம்.

குழந்தைகள் அரும்பொருட் காட்சி மனை உருவாக்கப்பட்ட போது, வயது வந்தோர் தவறுதலாகத் தான் விலக்கப் பட்டனர் என்று எண்ணுவதற்கு ஆதாரம் உள்ளது. வயது வந்தோரும் குழந்தைகள் அரும் பொருட்காட்சி மனைகளைப் பார்க்க விரும்புகின்றனர். சில காட்சி மனைகளில், காட்சிப் பொருட்களைக் குழந்தைகள் தடையின்றிப் பார்க்க வசதி செய்வதற்காக, வயதுவந்தோர் குறிப்பிட்ட சில நேரங்களில் தான் அனுமதிக்கப் படுவர் என்று தடை விதிக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. உலகக் காட்சி அரங்கில் அமைக்கப்படவிருக்கும் குழந்தைக் காட்சிமனைப் பொருட்களைப் பொறுத்த வரை, வயது வந்தோர்க்கு அனுமதி மறுக்கும் அவசியம் சில இடங்களில் ஏற்பட்டது என்பது அனுபவத்தால் அறியப்பட்டது.

குழந்தை சுற்றித் திரியவும், காட்சிப் பொருட்களைப் பயன்படுத்தவும், முழுச் சுதந்திரம் அளிக்கும், அரும் பொருட்காட்சி மனை, எதிர்காலத்தின் இடுகுறிகளில் ஒன்றாகும்.

கலாச்சார வாய்ப்பிழந்த சிறுபான்மையினர்க்காகவும், ஊனமுற்றோர்க்காகவும், அமைக்கப்படும் அரும் பொருட் காட்சி மனைகளும் மிக முக்கியமானவை. கண்பார்வை இழந்தோர், காட்சிப் பொருட்களைத் தொட்டறிந்து தெளிவு பெற வாய்ப்பளிக்கும் அரும்பொருட் காட்சி மனை ஒன்றை உருவாக்குவது, கண் பார்வையற்றவர் காண முடியாது என்பதை உணர்வதால் மட்டுமல்ல, ஊறுபுலன் மூலம் கல்வி பெறுவது, பொருத்தமானதொரு முறை என்பதை வலியுறுத்துவதற்கும் தான்.

மற்றொரு குறிப்பிடத்தக்க வளர்ச்சி உள் நகர அல்லது கெட்டோ அரும்பொருட் காட்சி மனைகளை உருவாக்க நடந்துவரும் பரிசோதனையாகும். மெய்ம்மையின் சின்னங்கள், அல்லது உருவகப் பொருட்களை உருவாக்கக் காட்சி மனைப் பார்வையாளரின் விருப்பத்தின் பயனாய் எழுந்துள்ளவை இவை. இந்த உருவகப் பொருட்கள், பொருளற்றனவாகவும், சிறுபிள்ளைத்தனமாகவும், மெருகற்றனவாகவும், பகட்டாகவும் கூட, நடுத்தர வர்க்கப் பார்வை

யாளர் ஒருவருக்குத் தோன்றக் கூடும். ஆனால் இந்தப் பரிசோதனைக் காட்சி மனைகளில் சிறந்தவற்றில்கூட சில்லரை முதலாளித்துவ வர்க்கப் பண்பியல்களைச் சுமத்துவது, அனு மதிக்கப்பட மாட்டாது.

பாமர மக்களுக்குக் கலாச்சாரம்' என்ற பெயரில், பாமர மக்களுக்குப் பெருந்தன்மையாகச் சலுகை செய்வ தாக எண்ணிக் கொண்டு, வகுக்கப் படும் திட்டங்களுக்கும் இந்தக் காட்சி மனைகளுக்கும் சிறிதும் தொடர்பு கிடையாது. அரும் பொருட்காட்சி மனையைப் பயன் படுத்துவோர், எல்லையற்ற அளவில் வெவ்வேறு வகையான, மாறுபட்ட, மெய்ம்மையின் உருவகப் பொருட் களைக் கையாள்வது தான் அனுமதிக்கப் படுகிறது. அங்குக் கற்பனை மாயம் என்று தோன்றக் கூடியது, பெரும்பாலும் தொடர் பற்றதாய் இராது. உருவகப் பொரு ளில் கையாளப்படும் விளக்கக் குறி யீடுகள் இரகசியமாக இருக்கலாம். ஆனால் அவை பார்வையாளருக்கு மட்டுமல்ல பயன் படுத்துவோருக்கு கும் காட்சி அமைப்பாளரும் அவர் கள் தானே—மந்தணமாகவே இருக்கும்

அன்றாட வாழ்வுக்குத் தாங்கள் பொருத்தமாயிருக்க முடியுமென பதை இந்த அரும்பொருட் காட்சி மனைகள் உணர்கின்றன. கலைக் கண் காட்சிக் கூடங்களின் திறப்பு விழா வின்போது, ஒத்திகைகள் பல நடத் திப் பயிற்சி பெற்றதன் பயனைத் கலைஞர் பற்றியும் கலைப் பாணிகள் பற்றியும், ஒரு கலைஞர் மற்றொருவர் மீது செலுத்தும் செல்வாக்கு பற்றி யும் விரிவாக விளக்கம் கூறித் திறனாய்வு நிபுணர்போல் உரை நிகழ்த்தும் அளவுக்கு, இந்த அரும் பொருட் காட்சி மனைகள் தங்கள் பார்வையாளருக்குக் காட்சி யறிவில் பயிற்சி அளிக்க முயல்வதில்லை. ஆனால், அதற்கு மாறாகக் காட்சி மனையைப் பயன் படுத்துவோர், பெரும்பாலும் முதன் முறையாகத் தங்கள் தனிப்பட்ட உலகைப் பொது வான சாமானியச் சூழ்நிலையின் பின்ன ணியில், அதன் பேரெழில், அதன் பயங்கரம் அனைத்தும் சேர்ந்த பின்ன ணியில், கண்டுணர, இக் காட்சி மனைகள் உதவ முயல்கின்றன.

சிறுபான்மையினருக்கெனச் சிறப் பாக அமைக்கப்பட்டுள்ள அரும் பொருட்காட்சி மனையின் முக்கிய வேறுபாடு, அங்கு பார்வையாளரே காட்சி அமைப்பாளரும் ஆகி விடு கின்றனர் என்பதுதான். அங்கு காப் பாளரும், விளக்கக் குறிப்பாளரும், ஏற்கும் பொறுப்புக்கள் புதிதானவை யல்ல; ஆனால் திருந்தியவை. காப் பாளருக்கு இப்பொழுது தரப்படும் பொறுப்பு, அவருடைய அடிப்படை யான பொறுப்பு; அறிஞரென்ற பொறுப்பு; பார்வையாளர் தம் படைப்பாற்றலைப் பயன்படுத்தத் தேவைப்படும் வளங்களை வளர்க்கும் பொறுப்பு. அரும் பொருட் காட்சி மனையில் கல்விப் பொறுப்பாளர், வடிவமைப்பாளர் ஆகியோரையும் மற்றவர்களையும் குறிக்க, ''விலக்கக் குறிப்பாளர்'' என்ற சொல்லை நான் கையாள்கிறேன். அச் சொல்லின் பொருளுக் கேற்ப, விளக்கம் கூறும் பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. காட்சி மனையைப் பயன்படுத்து வோர், அங்குள்ள வளங்களை ஆக்க பூர்வமாகப் பயன்படுத்த வசதி செய்யும் முறையில், அந்த வளங் களில் பொதிந்துள்ள விளக்கங்களை எடுத்துக் கூறுவது இவர்கள் பொறுப்பு. இதைச் செய்வதற்கு, இவ் விளக்கக் குறிப்பாளருக்கு ''இரு மொழிகள்'' தெரிந்திருக்க வேண்டும். அதாவது, மனைக் காப்பாளர் பேசும் மொழியிலும் அவர்களுக்குத் தேர்ச்சி வேண்டும். அரும் பொருட்காட்சி மனைப் பார்வையாளர்—காட்சிமனை யைப் பயன்படுத்துவோர் என்று அவர்களைக் குறிப்பிட விரும்போன் பேசும் மொழியிலும் அவர்களுக்குத் தேர்ச்சி வேண்டும். ஆனால் இங்கு நாம் விவாதித்துக் கொண்டிருப்பது, நாளைக் கேற்ற குறிக்கோள்கள்; இன்று ஒரு சில பரிசோதனைச் சூழ் நிலைகளில் மட்டுமே இங்குமங்கும் காணக் கூடிய அம்சங்கள்.

நாம் முன்பு கண்டவாறு, அடிப் படையான சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் ஆக்க பூர்வக் காட்சி மனைக்கு, மற்ற மரபு வழி வந்த பொருட்காட்சி மனைகளில் இருப்பதி லிருந்து மாறுபட்ட, நிர்வாக,இயக்க அமைப்பு தேவைப்படும். ஏனென் றால் இங்கு அதிகாரச் சமனிலை மாறிவிட்டது. அதன் குறிக் கோள் களைப் பயன்படுத்துவோர் தீவிர மாக, ஆக்க பூர்வமாகப் பங்கு கொள்வதன் மூலம் தான் எய்த முடியுமே யொழிய, எழுச்சியற்ற நிலை யில் உள்ள பார்வையாளர் தலையில் தத்துவ வாதத்தைத் திணிப்பதால் அல்ல.

இக் கருத்தை ஆராயும்போது, அரும் பொருட் காட்சி மனையின் அடிப்படைப் பொறுப்பு அதாவது, சிறப்பாக, அல்லது ஈடற்றதாக, அல்லது மனிதனின் உயர்ந்த சாதனை யின் சின்னமாக விளங்கும் பொருட் களைச் சேகரிக்கும் பொறுப்பு— பாதிக்கப் படாமலும் புறக்கணிக்கப் படாமலும் பார்த்துக் கொள்வது முக்கியம். அந்தப் பொறுப்பை நாம் விவாதிக்காததற்குக் காரணம், அது அடிப்படை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதும், இப் போது கூறப்பட்டுள்ள யோசனை யால், அது பாதிக்கப்படவில்லை என் பதும் தான்.

இறுதியாக, இந்த யோசனையைச் செயல்படுத்த வேண்டுமென்றால், சமூக அறிவியல்களின் முறைகளையும் நோக்குகளையும் மேற்கொள்வது அவ சியம் என்பது வெளிப்படை. அரும் பொருட் காட்சி மனைகளின் சமூக வியல் தன்மை, சமூக உளவியல் நிலை ஆகியவை, அண்மையில் தான் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ள இயல்புகள். ஆயினும், இன்றைய சமூகத்தில் அரும்பொருட் காட்சி மனையின் பங்கையும் பொறுப் பையும் நாம் ஆராய முற்படும் போது நாம் முதன் முதலில் நாட வேண்டியது சமூக அறிவியல் அறிஞ னின் உதவியையும் ஆலோசனையை யும் அல்லவா?

தமிழில்: கா. திரவியம்

(30 ஆம் பக்க தொடர்ச்சி)

தாலும் இன்றைய உலகச் சூழ்நிலை யில் மக்களை ஒன்றுபடுத்த கல்வி பயன்படுத்தப்பட்ட வேண்டும்' என்ப தாலும் நான் இந்தப் பதவியை ஏற்றுக் கொண்டுள்ளேன். இன்று பன்னாட்டுத் தொடர்பு ஒரு சிறிதா வது இல்லாத கல்வி, நவீன அறி வியல் மற்றும் தொழில் நுணுக்கத் தொடர்பில்லாத கல்வி முறை எந்த அளவுக்கு காலத்துக்கு ஒவ்வாததாக இருக்குமோ அந்த அளவுக்கு ஒவ் வாததாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.''

பதினோரு நாடுகளில் தேசிய குழுக் கள் அமைக்கப்பட்டு, அவை இத்திட் டம் முன்னேறவும், பொது மக்கள் ஆதரவு பெருகவும் நிதி திரட்டவும் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கவும் முயன்று வருகின்றன. மேற்கு ஜெர் மனியிலும், வட அமெரிக்காவிலும், அடுத்த இரண்டு கல்லூரிகளை நிறுவ, திட்டம் திட்டப்பட்டு வருகிறது.

மேற்கு ஜெர்மனியில் வலிவுள்ள நிறுவனக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பொது மக்கள் ஆதரவும் மிகுதியாக உள்ளது. பால்டிக் மற் றும் பவேரியா பகுதிகளில் கல்லூரி அமைக்க ஏற்ற பல இடங்கள் பரி சீலிக்கப்பட்டு வருகின்றன.

கனடாவில் திரு. லெஸ்டர் பியர் சன், பாராளுமன்ற உறுப்பினர் டொனல்டு காமிரான் ஆகியோர் அடங்கிய பெரிய தேசியக் குழு ஒன்று வட அமெரிக்கக் கல்லூரி ஒன்று நிறுவுவதற்கான திட்டம் தீட்டி வருகிறது. உத்தேசிக்கப்பட் டுள்ள இக் கல்லூரியை ஐ. நா. வின் அமெரிக்கா மற்றும் கனடா குழுக்கள் கூட்டாக அமைக்கும். பிரிட்டிஷ் கொலம்பியாவில் அமைக்கப் படவிருக்கும் இக்கல்லூரி, ஜப்பான் இந்தோனேஷியா, மலேஷியா, ஆசியா ஆகிய நாடுகளிலிருந்து மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் 1972ஆம் ஆண்டு முதல், இக்கல்லூரி செயல்படுமென எதிர்பார்க்கப் படு கிறது.

இத்தாலியிலும், ஸ்காண்டி நேவி யாவிலும் இக்கல்லூரிகளை நிறுவுவ தில் பேரார்வம் காணப்படுகிறது. பிரான்சில் பிரெஞ்சுக் கல்விமுறைக்கு உட்பட்ட வகையில் இத்தகைய கல்லூரி ஒன்றை அமைப்பது பற்றி ஆய்வுக் குழு ஒன்று ஆய்ந்து, தனது அறிக்கையை அண்மையில் சமர்ப்பித்துள்ளது. தென் கிழக்கு ஆசியாவுக்காக ஒரு கல்லூரி நிறுவும் முயற்சியும் பரிசீலனையில் உள்ளது.

உலகம் முழுவதும் இவைபோன்று கல்லூரிகள் பல தோன்றும்போது பன்னாட்டுக் கல்வி வளர்ச்சிப் பணி யில் அவை சிறப்பிடம் பெறும். முதன் முதலில் இங்குப் பயின்ற மாணவர்கள் என்ன சொல்கிறார்கள்? ''நாங்கள் பெரிதும் முன்னேறி விட் டோம். இங்கு பயின்ற 2 ஆண்டுகளை எங்கள் வாழ்நாள் முழுதும் நினைவில் வைத்திருப்போம்.'' என்கிறார்கள். அவர்கள் சொல்வது முற்றிலும் சரி என்று எனக்குத் தோன்றுகிறது.

தமிழில்: 'அறிவியல் நம்பி'

Edited and published by T. P. Meenakshisundaran for the Southern Languages Book Trust, 458, Poonamallee High Road, Madras-10 and printed by P. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-26

அண்மை வெளியீடு



375 பக்கங்கள். 42/-(£ 2.10) $ 7.00 28 F

எனது நாடு விழிக்கட்டும்

வளர்ச்சியில் மனிதனின் பங்கு:
அடுத்த 10 ஆண்டுகள் பற்றிய சிந்தனைகள்

மால்கம் எஸ். ஆதிசேஷையா
யுனெஸ்கோ துணைப் பொது இயக்குநர்

■ பொருளாதார, சமூக வளர்ச்சியில் கல்வியும் பண்பாடும் அறிவியலும் பெறும் பங்குபற்றி மனிதநல நோக்குடன் கூடிய ஆய்வு

"இந்நூலில் விளக்கப்படும் வளர்ச்சித் தத்துவம் இரண்டாவது வளர்ச்சிப் பத்தாண்டுக் காலத்தில் யுனெஸ்கோவிற்கு வெற்றிகரமாக வழிகாட்டும் ஒளி விளக்காக இயங்கும்"

ஊதாண்ட்
ஐ. நா. பொதுச் செயலாளர்

யுனெஸ்கோ கூரியர் - தமிழ்ப் பதிப்பு

ஐ. நா. வின் அங்கமாக உலக கல்வி, விஞ்ஞான, கலாச்சார மேம்பாட்டுக்கு இடையறாது பாடுபட்டுவரும் யுனெஸ்கோ அமைப்பின் மாத வெளியீடே 'யுனெஸ்கோ கூரியர்' இதழ்.

பலதுறை அறிவும் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய பதின்மூன்று உலக மொழிகளில் வெளிவரும் 'யுனெஸ்கோ கூரியர்' இதழ் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழிலும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

உலகைக் காட்டும் பலகணியாக அமைந்துள்ள இவ்விதழ் உலகம் முழுவதற்கும் அக்கறையுள்ள பிரச்சினைகளைப்பற்றி உலக அறிஞர்கள் பலரும் எழுதும் சிந்தனை வளமிக்க ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்ட அறிவுக் களஞ்சியமாக மாதந்தோறும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

அகில உலகப் பிரச்சினைகளை நடு நிலைமையில் அணு அணுவாக அறிந்துகொள்ள உதவும் ஒரே சர்வதேச தமிழ் இதழ் இதுவே யாகும்.

பக்கத்துக்குப் பக்கம் ஏராளமான படங்களையும் கவர்ச்சியான அழகிய அச்சு, அமைப்பும் கொண்ட இவ்விதழை மாணவர்களும் கல்வி நிலையங்களும் நூலகங்களும்—ஏன்—அறிவுத்தாகம் கொண்ட அனைவருமே இதழின் சந்தாதாரராகச் சேருவதன் மூலம் தம் உலக அறிவை வளர்க்க-வளப்படுத்திக்கொள்ள அருமையானதோர் வாய்ப்பு.

ஆண்டுச் சந்தா ரூ. 10-50 கல்வி நிலையங்களுக்கு ரூ. 9-50 தனிப்பிரதி ரூ. 1-00.

தொடர்பு கொள்க :

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்
458, பு[illegible]மல்லி நெடுஞ்சாலை
கீழ்ப்பா[illegible] : சென்னை-10

REGD. NO. M. 8276

Photo : V. Chuprynin, Archaeology Institute of the Ukrainian Academy of Sciences Kiev

சித்தியச் சிறப்பு

இளம் யுக்ரேனிய தொல்பொருளாய்வாளர் வசிலி பிட்சில்யா
தென் யுக்ரேனிய கல்லறையில் 2400 ஆண்டுகளாகப் புதைந்
கிடந்த அரிய சித்திய கோப்பையைக் கண்டெடுத்தது 196
ஆண்டின் வியத்தகு தொல்பொருளாய்வுகளுள் ஒன்றாகும்.
னின் ...ம் பக்கம் பார்க்க) மேலே: கோப்பையின் விரிவான தோற்
யும் அல் ... ஆம் பக்கத்தில் முழுத்தோற்றம் காணலாம்). வெள்ளி
... கைகளும் ...திரக உடைகளும் உருவங்களுக்கு ஒளித்
...ந்கின்ற...